★ விலை ரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஐப்பசி 8 முஹற 7 இதழ் 254

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 25—10—82

பல்கலைக்கழக புதிய கல்வி ஆண்டு இன்று ஆரம்பம்

கொழும்பு பல்கலைக்கழகங்களினதும், தொழில்நுட்பக் கல்லூரிகளினதும் புதிய கல்வி ஆண்டு இன்று ஆரம்பமாகின்றது.

இந்த ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு 5,150 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு 1420 மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு 5,100 மாணவர்கள் அனுமதி பெற்றனர்.

இம்முறை 1 001 மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசிலும், 50 மாணவர்களுக்கு தனிப்பட்டவர்களினால் வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

இந்த ஆண்டு தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 14,000 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். இது கடந்த ஆண்டைவிட 3,000 அதிகமாகும்.'' (வெ)

1 கோடி 5 லட்சம் பேருக்கு சுவாசப்பை கயரோகம்

புதுடில்லி, அக். 24

இந்தியாவில் 1 கோடி 5 லட்சம் பேர் கதிரியக்கத் தன்மை கொண்ட சுவாசப்பை கயரோகத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கயரோகத்தை ஒழிப்பதற்காக இந்திய அரசாங்கம் குழு வொன்றை அமைத்துள்ளது.

பாராளுமன்றம் நவம்பரில் கலைப்பு?

டிசம்பரில் தேர்தல்!

இந்த நிலையில்; பொதுத் தேர்தலைத் தாமதமின்றி நடத்தவும் பாதிக்கப்பட்ட மாவட்

[8-ம் பக்கம் பார்க்க]

சட்டசபைத்தேர்தல் உடன்பாடு

புதுடில்லி, அக். 24

ஆந்திராமாநில சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தெலுங்கு தேசக் கட்சித்தலைவர் திரு. என். டி. ராமராவ் தலைமையில் 5 எதிர்க் கட்சிகள் உடன்பாடொன்றிற்கு வந்துள்ளன. (வெ)

(கொழும்பு)

ஜனதிபதி தேர்தலில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனே அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, பாராளுமன்றத் தேர்தல் டிசம்பர் மாதம் நடைபெறலாம் என்று அரசு சார்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பாராளுமன்றத் தேர்தல் டிசம்பரில் நடைபெறும் பட்சத்தில்; அடுத்த மாதம் நடுப்பகுதிக்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

ஜனதிபதி தேர்தலில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனே வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, பாராளுமன்றம் வியாழக்கிழமை முதல்தடவையாகக் கூடுகிறது.

அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டது தொடர்பாக அரசு சார்பில் முழு அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு பாராளுமன்றம் அவசரமாகக்கூடும் அதேநேரத்தில்; அடுத்த மாதம் நடுப்பகுதியில் பாராளுமன்றத்தைக் கலைத்து, டிசம்பர்மாதம் நடுப்பகுதியில் பொதுத்தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

நடந்துமுடிந்த ஜனதிபதி தேர்தலில் ஐ. தே. கட்சி வெற்றிபெற்றுள்ளதேநேரத்தில்; முக்கியமான மாவட்டங்களிலும். அதிகமான தேர்தல் தொகுதிகளிலும் ஐ தே கட்சி பின்வாங்கியிருப்பதும்; இதற்கு எதிர்மாறாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி முன்னணியில் நிற்பதும் ஜனதிபதி தேர்தல் பாக்களிப்பு புள்ளி விபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது இப்புள்ளி விபரங்களின்படி ஐ. தே. கட்சியிலும் பார்க்க, சிறி லங்கா சுதந்திரக் கட்சி அதிகமான மாவட்டங்களைக் கைப்பற்றியுள்ளது.

டேவிட்சன் வீட்டை ராணுவம் சோதனையிட்டது!

(யாழ்ப்பாணம்)

ஈழமாணவர் பொதுமன்றச் செயலாளர் திரு டேவிட்சனை விசாரணைக்காக தேடிச் சென்ற இராணுவத்தினர், அவரது வீட்டைச் சோதனை செய்ததுடன், வீட்டை படம் பிடித்துச் சென்றதாகத் தெரிகிறது.

ஜனதிபதியின்யாழ்ப்பாணம் வருகையைப் பகிஷ்கரித்துத் துண்டுப் பிரசுரம் வெளியிட்டதற்காக, கைது செய்யப்பட்டு பனுகொடை முகாமில் இவர் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் கடந்த 14ம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் நவாலியிலுள்ள திரு டேவிட்சனின் இல்லத்துக்கு இராணுவத்தினர் கிரும்பவும் சென்று தேடியபொழுது அவர் அங்கு இல்லாததைத் தொடர்ந்து வீட்டைச் சோதனையிட்டதுடன் படம் பிடித்துச் சென்றார்களாம். (மா)

வடமாகாணத்தில்

பாதுகாப்பு படையினர் சேவை நீடிக்கும்

(கொழும்பு)

ஜனதிபதி தேர்தலையொட்டி வடமாகாணத்துக்கு அனுப்பப்பட்ட பாதுகாப்புப்படையினர் உடனடியாகத் திருப்பி அழைக்கப்படமாட்டார்கள் என்று அறியப்படுகிறது.

அவசரகால நிலைச் சட்டம் நீக்கப்பட்டாலும்கூட இராணுவத்தினரும் பொலிசாரும் தொடர்ந்து வடமாகாணத்தில் நிலைகொண்டிருப்பார்கள் என்று அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் இன்று திங்கட்கிழமை நீக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், சில பகுதிகளில் ஏற்பட்ட சதிநாசவேலைகளைத் தொடர்ந்து அவசரகால நிலைச் சட்டம் மேலும் சில நாட்களுக்கு அமுலில் இருக்கலாம் என்று அறியப்படுகிறது.

வடமாகாணத்தைப் பொறுத்த வரை; சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட இராணுவமும் பொலிசாரும் தொடர்ந்து சேவையிலிருப்பார்கள் என்றும், குறிப்பிட்ட சில

[8ம் பக்கம் பார்க்க]

"கூட்டணியின் நிலையை ஏற்றுக்கொண்டுள்ளனர்"

வெளிநாடு விஜயம் குறித்து 'நவம்'

(மட்டுவில்)

''கடல்கடந்த நாடுகளில் வதியும் தமிழர் சமீபகாலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொண்ட அரசியல்முடிவுகள்பற்றி திருப்தியடைந்துள்ளனர்'' என்று சாவகச்சேரி எம். பி. திரு. வி.ன். நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச பாராளுமன்ற ஒன்றிய செயற்குழு உறுப்பினரான திரு. வி என். நவரத்தினம், ரோம்நகரில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற ஒன்றிய மகாநாட்டை முடித்துக்கொண்டு அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, இங்கிலாந்து உட்பட பல நாடுகளுக்குச்சென்று இந்தியாவுக்கு வந்து இச்தியாவிலிருந்து தாயகம் திரும்பினர்.

திரு. நவரத்தினம், தாம் சென்ற நாடுகளிலெல்லாம் இலங்கை அரசியல் நிலமை பற்றியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைபற்றியும் இலங்கை ஜனதிபதித் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி மேற்கொண்டுள்ள நிலைப்பாடு பற்றியும் எடுத்து விளக்கினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் கொள்கைகளை பூரணமாக ஏற்றுக்

[8ம்பக்கம் பார்க்க]

சிறையிலிருந்து கைதி தப்பி ஓடினர்!

மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து லயனல் திலக என்ற சிறைக் கைதி தப்பி ஓடிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பதியத்தலாவவைச் சேர்ந்த இவர் பல கொள்ளைகளில் தொடர்புடையவர். இவர் நேற்று அதிகாலை சிறையிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இக்கைதி சிறைச்சாலைக் கம்பியை வளைத்து வெளியே வந்து, கட்டிடத்தின்மேலுள்ள கூரையில் ஏறி, சிறைச்சாலை சுற்றுமதிலுக்குமேல் அடுக்கி வைக்கப்பட்ட கற்களை அகற்றி விட்டு வெளியே தப்பி ஓடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிசாரும், சிறைக்காவலர்களும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (வெ)

"குமாரின் கணிப்பு அர்த்தமற்றது!"

'அமிர்' கண்டனம்

(ஏ. வீ. மாணிக்கம்)

''ஜனதிபதி தேர்தலில் தமிழீழக் கோரிக்கைக்கு எதிராக தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர் என்று ஜனதிபதி கூறிய கருத்தும், தமிழீழக் கொள்கையை முன்வைத்து ஆணை கேட்டு போட்டியிட்ட தமிழ் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் திரு குமார் பொன்னம்பலத்தின் கருத்தும் அர்த்தமற்ற வையாகும். தமிழர் விடுதலைக் கூட்டணி 1977ல் தமிழீழக் கோரிக்கையை தமிழ் மக்கள் முன்வைத்து, அதற்கான ஆணையைப் பெற்று விட்டது. இது எப்பொழுதோ முடிந்த காரியம்''

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு அ. அமிர்தலிங்கம் 'ஈழநாடு' பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

''தமிழர் விடுதலைக் கூட்டணியை முடித்துவிட்டதாக திரு. குமார் பொன்னம்பலம் கூறிய கருத்தை தேர்தல் நடைபெற்ற ஒரு நாளைக்கு முன்னர் சொலியிருந்தால், அவருடையநிலை எப்படி இருந்திருக்கும் என்பதை பின்பு புரிந்துகொண்டிருப்பார்'' என்று கூறிய திரு. அமிர்தலிங்கம்;

''பொய்யான துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுத்தான் திரு குமார் பொன்னம்பலம் இவ்வளவ வாக்குகளைப் பெற்றுள்ளார் என்பதை மறந்து தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கண்டிப்பதிருப்பது வருந்தத்தக்கது'' என்று கவலை தெரிவித்தார்

''பொய்யான துண்டுப் பிரசுரத்தை தேர்தல்நடைபெறும்

[8-ம் பக்கம் பார்க்க]

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

நேரடியாக இறக்குமதி செய்த புனரமைக்கப்பெற்ற CD 125, C 90, C 70 HONDA மோட்டார் சைக்கிள்களும், DELICA வான்களும், ELF ISUZU டிரக் வண்டிகளும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன்கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 4857

Wheel-burrows நல்ல தரத்திலும், குறைந்த விலையிலும் எம்மிடம் பெறலாம் விற்பனையாளர்களும் பெற்றுக்கொள்ளலாம். கிடைக்கும் இடம்: டைனமிக்எஞ்சினியறிங்லிமிற்றெட், காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை. 4919

11சிறி357 இலக்கம்கொண்ட Morris oxford கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு, தொடர்புகொள்க V. C. பிரான்சிஸ், மதுவரி நிலையம் கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். 4925

தமிழ், ஆங்கில தட்டச்சு, ரோனியோ மெசின்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிர்வாகி, சங்கர் ஹாட்லி இன்ஸ்ரிரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 4864

நல்லூர் நாயன்மார் வீதியில் 2½ பரப்பு வீட்டுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மனோகரன், முத்திரைச் சந்தி, நல்லூர். 4937

நஷனல் பனசொனிக் கலர் டிவி 27'' எலக்ரோனிக் Remote Control 213, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 4932

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ், ஆங்கில எழுத்துக்களும் சகல உபகரணங்களும் கூடிய அச்சகம் கூடிய விலை கேட்பவர்களுக்கு உடனே விற்கப்படும். கட்டர் மெசின் தனித்தும் கொடுக்கப்படும். அத்துடன் நீர் இறைக்கும் மெசினும் விற்கப்படும். உரிமையாளர்: வா. சி. மாணிக்கம், மொழியரசி அச்சகம், அளவெட்டி. 4933

சேவை

வீடு வளவு, வீடு கட்டக் கூடிய வெறும் காணிகள் வாங்க விரும்பியவர்கள் எங்களுடன் தொடர்புகொண்டால் வாங்கித் தருவோம். திருமண ஒழுங்குகளும் செய்து தருவோம். உடன்தொடர்பு கொள்ளும் முகவரி; செ. சிவகுருநாதர், சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 4834

வகுப்புக்கள்

83ம். 84ம் ஆண்டுக்கான கலை, வர்த்தகம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து Spoken English வகுப்புக்கள். தொடர்பு: ஹாட்லி இன்ஸ்ரிரியூட் பிரதான வீதி, பருத்தித்துறை. 4865

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

சேவை

உருத்திரபுரம் எள்ளுக்காடு தான்தோன்றிபுத்தடி விஷ்ணு ஆலயத்தில் இன்று தீக்குளிப்பு நடைபெறும். இதைத் தொடர்ந்து ஞாயிறு, செவ்வாய் நாட்களில் ஞான அருளால் ஸ்ரீ நரசிங்கசுவாமிகள் உங்கள் குறைகளை நீக்குவார். சுவாமியை தரிசித்து குறைகளை நீக்குங்கள். (4940)

தவறிவிட்டது

பிரெஞ்சு மொழி புத்தகங்கள் இரண்டு டாக்டர் சம்பந்தரின் டிஸ்பென்சரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியடி க. பொன்னுத்துரை என்பவரிடம் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4935)

காணவில்லை

82 சிறி 5249 மோட்டார் சைக்கிள் CD 200 Honda சைட் கவருடன், லைசன்ஸ், காப்புறுதிப் பத்திரங்களுடன் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் நேரில் கொண்டு வந்து கொடுத்து தகுந்த சன்மானம் பெற்றுக் கொள்ளவும். (4939)

WANTED

Receptionist cum Telephonist (Females only) with pleasing personality and good command in English for a leading Computer Organisation in Jaffna. Please forward application together with certificates directly to Personnel Manager, Auto Cool Computers(Private)Ltd. 92, Kandappasegaram Road, Jaffna. 4936

Wanted employment in Jaffna aged 29 well experienced in official procedures ability to do correspondence and typing and good knowledge in English seeking management or Similar capacity. Apply: The advertiser Adv. No: 4912, C/o Eelanadu, Jaffna. 4912

புதிய பஸ் சேவை

(மன்னார்)

மன்னருக்கும் எருக்கலம் பிட்டிக்கு மிடையில் மேலும் ஒரு புதிய பஸ் வண்டி சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளது.

எருக்கலம் பிட்டி பஸ் பிரயாணிகள் சங்கம் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமதுடன்ட் தொடர்பு கொண்டதை படுத்தே இப் புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க)

அபிராமி அந்தாதி

(சுழிபுரம்)

சுழிபுரம் கம்பனை இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலய நவராத்திரிவிழா நடைபெற்று வருகிறது. புதன்கிழமை சங்காபிஷேகமும் கன்னி வாழை வெட்டும் நடைபெறவுள்ளது. 'அபிராமி அந்தாதி' விரிவுரையும் தினசரி நடைபெற்றுவருகிறது.

நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையமும் மாதர் மன்றமும் இணைந்து நாளை செவ்வாய்க்கிழமை நவராத்திரி விழா கொண்டாடவுள்ளது. பூசை ஆராதனையுடன், சொற்பொழிவுகளும் விவாத அரங்கும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

* * *

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்தினர் சரஸ்வதி பூசை கொண்டாடுகின்றனர், விசேஷ சொற்பொழிவுகள், இன்னிசை நிகழ்ச்சிகள் என்பனவும் விழாவில் இடம்பெறவுள்ளன.

\+ \+

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் இந்து மாணவர் மன்றத்தின் ஆதரவில் கலை மகள் விழா இன்று மாலை கல்லூரியின் பீற்றேர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. பூசையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் மாணவர்களின் இன்னிசைக்கச்சேரியும், வாத்தியக்கச்சேரியும் நடைபெறவிருக்கிறது.

× × ×

(அரியாலை)

அரியாலையில் கலைமகள் விழா கொண்டாடம்பட்டது. ஆனந்தன் வடலி வீதியில் விஷேசமாக அமைக்கப்பட்ட மேடையில் விழாவையொட்டி இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகளில் நடன நாட்டிய நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. நடன ஆசிரியை திருமதி ஜெயந்தி சண்முகலிங்கத்தின் மாணவிகள் இந்நிகழ்ச்சியை அளித்தனர்.

இறுதி நிகழ்ச்சியாக நாடகம் இடம்பெற்றது. அதிபர் திரு. கே. சதாசிவம் நன்றிதெரிவித்துப் பேசினார்,

(அ)

★

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கலைமகள் விழா புதன்கிழமை காலை கல்லூரியின் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில் யாழ். கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. வி. சபாநாயகம் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொள்ளுவார். (உ)

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

ஏழாலை, ஏழாலை தெற்கைச்சேர்ந்த அன்ரனிமுத்து ஜஸ்ரின் ஜெயரலி என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் வஸ்தியாம்பிள்ளை பற்றிக் அன்ரனிமுத்து-ஏழாலை தெற்கு, ஏழாலை. மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 141

எதிராக

வஸ்தியாம்பிள்ளை பற்றிக் அன்ரனிமுத்து பெண் மேரி அக்னேஸ்- ஏழாலை தெற்கு, ஏழாலை. எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இதனால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24-ம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார். 1982-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

சு. வ. கணேசன்,

பதிவாளர்.

என்னால் எழுதப்பட்டது

செ. இராமலிங்கம்,

மனுதாரின் சட்டத்தரணி.

(4881)

உரிமை குறைந்தோர் அபிவிருத்திக் கழகம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் உரிமை குறைந்தோர் சமூக பொருளாதார, கலை அபிவிருத்திக்கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கழகத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் புத்தூர் கலையக சனசமூக நிலையத்தில் அதன் தலைவர் திரு. இ. பரஞ்சோதியின் தலைமையில் நடைபெற்ற போது அதில் கழகத்தின் தலைவராக வடபிராந்திய பேரக்குவரத்துச்சபை ஊழியர் திரு. சி. தங்கத்துரையும் கழக அமைப்பாளராக ஆசிரியர் திரு. நா, சிவஞானமும், 12 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. என். ராசேந்திரன், அச்சுவேலி கிராமோதைய சபைதலைவர் திரு க. இராசதுரை ஆகியோர் உட்பட வேறுபலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கழகம் அரசியலுக்கு அப்பால்பட்ட முறையில் உரிமை குறைந்த மக்களின் அபிவிருத்தியில் செயல்படும் குறிக்கோளுடன் இயங்குவதெனவும் இதனை விஸ்தரிக்க நடவடிக்கையில் ஈடுபடுவதெனவும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. [உ]

புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 26-வது வருடாந்த நிறைவுப் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது புதிய நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. க. கதிரன் உபதலைவர் திரு. சி. வே. சின்னத்தம்பி செயலாளர் செல்வன் இரா. சிவலிங்கம் உபசெயலாளர் திரு. கந்த ஞானமுத்து பொருளாளர் திரு. க. செல்வராசா கமிட்டி உறுப்பினர்கள் திரு. வே. கதிரேசன், திரு. ஐ. அருள் திரு. ச. கிருஷ்ணன் திரு. சீ. சந்திரன் எண்பார்வையாளர் இரா வீரசிங்கம். (க)

கமநலசேவை அரிசி ஆலை

(மன்னார்)

மன்னார்-இலுப்பைக்கடவை கமநல சேவை நிலையத்தினால் அமைக்கப்பட்டுவரும் அரிசி ஆலை விரைவில் திறந்துவைக்கப்படும். இதற்கான நிர்மாண வேலைகள் யாவும் பூர்த்தியடையும் நிலையிலுள்ளன.

அரிசி ஆலையை திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை இலுப்பைக்கடவை கமநல சேவை நிலையத்தலைவர் திரு. வி. கணேசமூர்த்தி செயலாளர் திரு இராசேந்திரம் ஆகியோர் மேற்கொண்டுவருகின்றனர்,

கருத்தரங்கு

(அரியாலை)

வடமாகாணகிறிஸ்தவ ஆசிரியர்களுக்கான ஞான ஒடுக்கமும், கருத்தரங்கும் நவம்பர் மாதம் 1-ந் திகதி பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.



வாகனத்தை நீங்கள் வாங்கும்பொழுது அதன் பெறுமதியின் 75% கடனுதவி பெற்றுக்கொள்ளுங்கள்...

தவணை முறையில் எந்த வாகனத்தையும் உரிமையாக்கும் உங்கள் விருப்பத்திற்கு வழிக்கத்திலுள்ள சிறந்த சலுகைகளை நாங்கள் அளிக்கிறோம்.

வாடகைக் கொள்வனவு முறையில் நாம் வழங்கும் வாகனங்கள்:

- சுக சௌகரியமுள்ள பஸ் வண்டிகள்
- தாங்கி வாகனங்கள், பார வண்டிகள்
- லொறிகள்
- உழவு யந்திரங்கள்
- சாமான் வண்டிகள், பயனி வண்டிகள்
- குளிரூட்டப்பட்ட உல்லாச வண்டிகள்
- குடும்பத்திற்கேற்ற கார்கள்
- சகல வித மோட்டார் சைக்கிள்கள்

பலவித ரகங்களில்....

கவரும் மற்றைய சலுகைகள்:

- வரி விலக்கு
- நியாயமான மாதாந்த தவணை முறை
- 36 மாதம் வரையிலான வாடகை கொள்வனவுச் சலுகை

வாகனத்தை உரிமையாக்க நாங்கள் உதவுகிறோம்.

தபினன்ஸ் கொம்பனி லிமிரெட்

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

இந்திய - சீனஎல்லை பிரச்னை: விரைவில்தீர்வு ஏற்படும்!

சீனப் பிரதமர் நம்பிக்கை

பீகிங், அக். 24

இந்தியாவுக்கும், சீனாவுக்கு மிடையிலான எல்லைப்பிரச்னை விரைவில்தீரும் எனச் சீனப் பிரதமர் நம்பிக்கை தெரிவித் தார்.

இந்திய சீன நட்புறவுச் சங் கத்தினர் மத்தியில் பேசுகையி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்

எல்லைப்பிரச்னை சிக்கலாக இருந்தபோதிலும், இருநாடு களும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும், நல்ல நேக்குடனும் இதனை அணுகு வதால் விரைவில் தீர்வுஏற் படும் என்றும் அவர் தெரிவித் தார்.

1950ம் ஆண்டு, இந்தியா வுக்கும் சீனாவுக்குமிடையில் நட்புறவு நிலவிவந்ததையும் அவர் சுட்டிக்காட்டினர். [க]

மண்டலசார்பற்ற

மாநாட்டில் பி. எல். ஓ. தலைவரும்கலந்துகொள்வார்!

லண்டன், அக். 24

9 மண்டல சார்பற்ற நாடு களின் பிரதிநிதிகள் மாநாட் டில் கலந்துகொள்வதற்காக பாரதவெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவ் துனிஷ் போய் சேர்ந்தார்.

இம்மாநாட்டில். பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் திரு.அரபாத்தும்கலந்துகொள் வார்.

பாரத வெளியுறவு அமைச் சர் திரு. நரசிம்மராவ், திரு. அபாத்துடன், தனியாக பேச்சுவார்த்தை நடத்துவார்.

புதுடில்லியில் நடைபெற விருக்கும் 7வது மண்டலசார் பற்ற மாநாடு பற்றியும், திரு. நரசிம்மராவ், மாநாட்டில் தெரிவிப்பார்.

லெபனான் பிரச்னையில் மண்டல சார்பற்ற நாடுகள் பொதுவான நிலைமை வகிப்ப தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.]க]

ஆந்திரபிரதேச

கிருஷ்ணநதி தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும்!

சென்னை, அக். 24

சென்னைக்கு ஆந்திரப்பிர தேசத்திலுள்ள கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் வழங் கப்படும் என ஆந்திர முதல்வர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக உடன் படிக்கையொன்று கைச்சாத் திடப்படுமென்றும், தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. ராமச் சந்திரனுடன் தொடர்பு கொள்ளவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆந்திரபிரதேச மக்கள் இது பற்றிகுறை கூறினாலும், இது ஒரு மனிதாபிமான செயல் என்றும் அவர் தெரிவித்தார். (க)

ஆந்திர பிரதேசத்தில்

புயலுக்கு 25 பேர் பலி: லட்சம் பேர் பாதிப்பு!

புதுடில்லி, அக். 24

ஆந்திரப் பிரதேசத்தில் புய லினால் ஏற்பட்ட தாக்கத்தி னால் 25 பேர் பலியாகியிருக்க லாம் என்றும், 30 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளதாகவும், ஆந் திர முதலமைச்சர் திரு. விஜய பாஸ்கரரெட்டி தெரிவித்தார்,

மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கோரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்,

இந்தப்புயலினால் லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வும், பெருந்தொகையான பயிர்கள் நாசமடைந்துள்ள தாகவும் அவர் கூறினர்.

வீடிழந்தவர்களுக்கு தலா 250 ரூபாவும் 20 கிலோ அரிசி யும் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (க)

தமிழ்நாடு அரசுக்குஎதிராக நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, அக், 24

தமிழ்நாடு அரசின்அரிசியின் திய கொள் முதல் நிர்ணய விலையை ரத்துச் செய்யுமாறு சென்னை உயர்நீதி மன்றம் தீர் ப்பளித்துள்ளது.

அரிசியின் புதிய நிர்ணய விலையை ஆட்சேபித்து அரிசி கொந்தருத்து காரர்களும், மில் உரிமையாளர்களும், வர்த்தகர் களும் உயர் நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தனர். இந்த மனுமீது விசாரணை நட த்திய உயர் நீதி மன்றம், மனு வை ஆதரித்து தீர்ப்பு வழங்கி யுள்ளது.

இந்த தீர்ப்பை எதிர்த்து அப்பில் செய்வது பற்றி தமிழ் நாடு அரசு ஆலோசனை செய்து வருகின்றது. [க]

உலக இஸ்லாமியப்பேரவை

சமாதானத் திட்டத்தை ஈராக் ஏற்றுள்ளது

லண்டன், அக். 24

வளைகுடா யுத்தத்தில் உலக இஸ்லாமிய பேரவை சமர்ப் பித்த சமாதானத்திட்டத்தை ஈராக் ஏற்றுள்ளது.

உலக சமாதான பேரவைக் குழு, ஈராக் ஜனாதிபதியைச் சந்தித்து விரிவான பேச்சு வார்த்தை நடத்திய பின் சமாதான திட்டத்தைச்சமர்ப் பித்துள்ளது.

இதற்குமுன்னர் இக்குழு வினர் ஈரான் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். (க)

"பொதுத் தேர்தலுக்கும் உற்சாகத்துடன் செயல்படவேண்டும்"

-- எஸ். தொண்டமான்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலிவிட. எதிர்வரும் பொதுத்தேர்தலி லும் அனைவரும் உற்சாகமாகச் செயல்படுவார்கள் என எதிர் பார்க்கின்றேன் என்று கிரா மிய கைத்தொழில் அமைச் சரும், இ தொ. கா. தலைவரு மான திரு. எஸ். தொண்ட மான் கூறினார்.

ஜனாதிபதி தேர்தலில் மலை யகத்தின் சகல தொகுதிகளி லு வாக்களிப்பு நிலைபற்றி ஆராய்வதற்கு இ. தொ. கா. காரியாலயத்தில் கூட்ட மொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்திலேயே அமைச் சர் திரு எஸ் தொண்டமான் மேற்கண்டவாறு கூறினர் இக் கூட்டத்தில் இ. தொ. கா மாநில பிரதிநிதிகள், உதவிச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட னர்,

அமைச்சர் திரு. தொண்ட மான் பேசுகையில், தேர்த லில் மலையக மக்களும் இந்திய வம்சாவளியினரும் தமது வாக் குகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று கூறினர். (க)

பாடசாலை மூடப்பட்டது

சென்னை, அக், 24

மதுரைக்கு அருகிலுள்ள உசி லம்பிட்டி பாடசாலை மாணவர் மத்தியில் பதட்டநிலை ஏற்பட் டதைத் தொடர்ந்து பாட சாலை நவம்பர் 10ம் தேதிவரை மூடப்பட்டுள்ளது. க)

'சுதந்திரக்கட்சிக்கு 7 லட்சம் வாக்குகள் அதிகரித்துள்ளன'

மைத்திரிபால சேனநாயக்கா அறிக்கை

[கொழும்பு]

1971 முதல் சுதந்திரக்கட்சி வாக்குகள் அதிகரித்துவந்துள் ளன. ஐ. தே. க. வுக்கு 3 லட் சம் வாக்குகள் அதிகமாக கிடைத்திருக்கும் அதே வேளை யில் சுதந்திரக்கட்சிக்கு 7 லட் சம் வாக்குகள் அதிகரித்துள் ளன.

சுதந்திரக்கட்சி (மைத்திரி பிரிவு) தலைவரும் மதவாச்சி எம்.பி.யுமான திரு.மைத்திரி பால சேனநாயக்கா வெளி யிட்ட அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது 1977 முதல் சுதந்திரக்கட்சியின் விகிதாசாரம் 27 லிருந்து 39 ஆக அதிகரித்துள்ளது.

தமது பிரசாரத்தின் போது திரு. கொப்பேகடுவ பல நெருக்கடிகளை எதிர் நோக்கி னார் என்பது சகலரும் அறிந் ததே,

தமது வேட்புரிமை பற்றிய சட்ட வாதங்கள் குறித்த குளறுபடி உட்பட பலதடை களையும் கெடுதிகளையுமே சு. க.வேட்பாளர் களத்திற்கு சென்றார்.

வெகுஜன தொடர்பு பிர சார இயந்திரம் முழுவதும் சு. க. வேட்பாளருக்கு எதி ராக அதிகபயன் கருதிமுடுக்கி விடப்பட்டது.

26 லட்சம் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களுக்கும் நான் பாராட்டு தெரிவிக்கிறேன் ஜனாதிபதி ஜெயவர்த்தன இலங்கையின் முதலாவது ஜன திபதி தேர்தலில் பெற்ற வெற்றியை ஏற்றுக் கொள் ளும் அதே சமயம் வழமைக்கு மாறான கடின நிலையில் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ மேற்கொண்ட குறிப்பிடத் தக்க முயற்சிகளுக்கும் தகுந்த அங்கீகாரத்தை நாம் கொடுக்க வேண்டும்.

ராணுவக்கூட்டு கிடையாது

லண்டன், அக், 24

சீனாவுடன் இராணுவ கூட்டு எதுவும் கிடையாது என பாகி ஷ்தான் ஜனாதிபதி தெரிவித் துள்ளார். (க)

திருப்பதி உண்டியலில் பத்தரை லட்சம்

சென்னை, அக். 24

திருப்பதி உண்டியலில் பக் தர் ஒருவர் பத்தரை லட்சம் ரூபாவுக்கான 30காசோலைகளை செலுத்தியிருந்தார்.

இக்காசோலைகள் 83 மார்ச் 31–ம் தேதிக்குமுன் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக கோவில் நிர்வாகிகள் தெரிவித்தனர். (க)

குடிநீர் விநியோகம்

சென்னை, அக், 24

மதுரையில் குடி நீர் வழங்கு வதற்காக 7லட்சம் ரூபா ஒதுக் கப்படும் என்று மதுரை மேயர் திரு. பட்டுராசா தெரிவித்தார் தற்போது 12லொறிகளில் குடி நீர் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். [க]

உதவி

லண்டன், அக், 24

சாம்பியாவின் சமூக பொருளா தாரத் திட்டம் நிறைவேற்றப் பாரதத்தின் உதவி நாடப்பட் டுள்ளது. [க]

பங்களாதேஷில் கைதான 13 வழக்கறிஞர்கள்மீதுவிசாரணை

ஒருவாரகாலமாக நீதிமன்றம் பகிஷ்கரிப்பு

புதுடில்லி, அக். 24

பங்களாதேஷில் கைதுசெய் யப்பட்ட 13 கிரேஷ்ட சுப் றீம் கோர்ட் வழக்கறிஞர்கள் மீது விசாரணை நடைபெற விருக்கிறது. கைதுசெய்யப் பட்டவர்களில் சுப்றீம் கோர்ட் வழக்கறிஞர் சங்கத் தலைவரும் ஒருவராவார்.

நாட்டிலுள்ள சுப்றீம் கோர்ட்டை 4 கோடுகளாகப் பிரிப்பதற்கு அரசாங்கம் எடுத்த முடிவை வழக்கறிஞர களே ஆட்சேபித்துள்ளனர்.

பங்களாதேஷில் கடந்த ஒரு வாரகாலமாக சுப்றீம் கோர்ட் வழக்கறிஞர்கள், கோர்ட்டு களைப் பகிஷ்கரித்துவருகின்ற னர். பகிஷ்கரிப்பைக் கைவிட் டால், நடவடிக்கை எடுக்கப் படுமென்று அரசு எச்சரித்துள் ளது. [க]

மின்சார நிதி ஒதுக்கீடு

புதுடில்லி, அக், 24

பாண்டிச்சேரி நகருக்கு மின் சாரம் பெறுவதற்கு 2 கோடி 87 லட்சம் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது. (க)

பொருட்கள் சிக்கியது

சென்னை, அக், 24

பெருந்தொகையான அயல் நாட்டு, றேடியோக்கள், கைக் கடிகாரங்கள், கல்குலேட்டர் கள், ஜவுளிகள், சென்னையில் உள்ள பஸார்களிலிருந்து சுங்கஅதி காரிகளால் கைப்பற்றப்பட் டது.

இந்த அயல் நாட்டுப் பொரு ட்களின் மதிப்பீடு 42,000ரூபா வாகும். (க)

மே. ஜேர்மனியில்

ஆப்பாட்ட ஊர்வலம்

லண்டன். அச், 24

மேற்கு ஜெர்மனியில் வலது சாரி அரசாங்கம் கொண்டு வந் துள்ள பொருளாதார துறை மாற்றத்தை ஆட் சேபித்து நேற்று ஆயிரக்கணக்கு மேற் பட்ட தொழிலாளர், ஆர்ப் பாட்டம் நடத்தினர்கள்.

அரசு கொள்கையை மாற்ற முன்வராவிட்டால் நேரடி மோதல் ஏற்படும் என தொழிற்சங்க வாதிகள் எச்ச ரித்துள்ளனர். (க

மணிவாக்கு

கேட்டுப்போகிற வாசல் திரிவும் வழி வீசாலமுமா யிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிறவாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக்கண்டு பிடிக்கிறவர் கள் சிலர். — பைபிள்.

நமது நோக்கு

ஐ. நா. வின் அவலநிலை

தீமை என்பது ஒருவித நோய். பின்பு தீமையைக் குறித்துக் கவலைப்படுவது அதிகம் கொடிய நோய்.

37 ஆண்டுகளுக்கு முன் உதயமான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இன்றும் உயிர் வாழ்கின்றது; இன்னும் பல் லாண்டு வாழ்கவென வற் புறுத்தி வாழ்த்துவதற்கு இன்றைய இக்கட்டான நிலையில் அவசியம் உண்டு.

உலக சமாதானத்துக்கு அரும்பாடுபட்ட விஞ்ஞான மாமேதைகள் இருவர்; அல்பேட் ஐன்ஸ்டைன், பேட்ரும் ரசல் 93 வயத டைந்த ரசல் பிரபுவை பத் திரிகை நிருபர் ஒருவர் கேட்டகேள்வி; உலகம் எவ் வாறு இயங்குகிறது? அவரு டைய விடை; "அச்சம்! நான் தற்சமயம் தண்ணீர் பதார்த்தங்களையே உண்ண முடிகிறது. அரசியல் வாதிக ளின் கெடுபிடிகள் தொண் டைக்குள் விக்கல் ஏற்படுத் தியதால் எனது வழமை யான உணவைக் கைவிட்டு விட்டேன்."

இரண்டாவது உலகயுத்த முடிவிலே அமெரிக்கா அணு ஆயுதப்போரை அறிமுகப் படுத்தியதும் மனித வர்க் கம் முற்றாய் அழிந்து பொகும் ஆபத்து தத்துவ மேதை ரசல் போன்ற சில ருக்கே தென்பட்டது.

அரசியல்வாதிகள் அச ட்டை செய்துவந்த அழிவுப் போர் இன்று சாதாரண மனிதனுக்கக் நடுக்கம் ஏற் படுத்துகிறது.

37 வருடகாலம் உலக சரித்திரத்திலே ஒரு நீண்ட காலமெனக் கொள்ளமுடி யாது; எனினும் கடந்த 25 வருடங்களில உலகம்கண்ட அற்புத, அதேசமயம் அபாய விஞ்ஞானவளர்ச்சி இன்றைய உலகநிலையின் நெருக்கடியை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது.

தனது வரலாற்றில் பல அரிய சாதனைகளைப்புரிந்த ஐ. நா. இன்றையகால கட்டத்தில் தளம்பிநிற்பது நல்லெண்ணத்தைசெயலில் கொண்டுவர உலகின் உறு திப்பாடற்ற நிலையைக் குறிக்கின்றது.

மூன்றுவது உலகயுத்தம் ஒன்று தலைகாட்டவில்லை யென்பதற்கு ஐ நா. வை நாம் போற்றவேண்டும்; எத்தனைசர்வதேச சிக்கல் களையும், பிணக்குகளையும் தீர்த்துவைத்து, விளிம்பில் தோன்றியஉலகயுத்தத்தை பலமுறை தடுத்து வைத்த பெருமை இந்த உலக ஸ்தாபனத்துக்கு உரித்தா னது.

ஆனால் இன்று 37-வது வருடம்தந்த அறிக்கையில ஐ. நா. வின் புதுப்பொதுச் செயலாளர் குறிப்பிட்டிருக் கும் விடயங்களை நினைத்துப் பார்த்தால் இவ்வித அபாய நிலை, சர்வதேச நெருக்கடி முன் எப்போதும் இருக்க வில்லையெனத் தோன்று கிறது.

ஐம்பத்தொரு நாடுகளு டன ஆரம்பித்த இப பேரவை இன்று 157 அங் கத்துவ நாடுகளைக் கொண் டிருக்கின்றது; இவற்றுள் சமார் நூறுநாடுகள் சுதந் திரமடைந்து ஐ. நா.வைச் சேரும் வாய்ப்புக்கு இந்த உலக ஸ்தாபனமே பெரும் பங்களித்தது. எனவே ஆரம்ப நிலையிலிருந்த ஐ. நா. வேறுபட்டது. இன்று உலக சமாதானத்தை காப் பாற்றும்பொறுப்புமிகுந்து, அதனை நிறைவேற்றுவதில் சங்கடம் காணும் பேரவை வேறு.

இவ்வருடத்தைக் குறிப் பாக நோக்கினால், இரண்டு வருட காலமாக நடை பெறும் வளைகுடா யுத்தம் ஓய்ந்தபாடில்லை; அமெ ரிக்கா, பிரிட்டன், ஆர் ஜென்டினாவாகிய மும்மூர்த் திகளும், ஐ. நா வின் சமாதான முயற்சிகளை ரக சியமாகப் புறக்கணித்து ஒரு அனுவசியமான போரை நடத்திமுடித்தன; இஸ்ரேல் லெபனான் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கு இடமளிக்காமல், ஐ. நா. சமாதானப்படையையும் உதாசினம்பண்ணி பெய் ரூற்றில் பேரழிவையும் அகதிரமத்தையும் ஏற் படுத்தியது.

இவைபோன்ற சம்பவங் களை ஆராய்ந்து பார்த்தால், ஐ நா. பாதுகாப்புச்சபைத் தீர்மானங்கள் காற்றிலே பறப்பது புலனாகும்; அவைக் குரிய ஆதரவை சம்பந்தப் பட்ட நாடுகள் அளிப்ப தில்லை.

பதினைந்து நாடுகள் கொண்ட பாதுகாப்புச் சபை செயற்றிறனற்றிருப் பதை ஐ. நா. பொதுச் செயலாளர் விசனத்துடன் குறிப்பிடுகிறார்.

பாதுகாப்புச் சபையில் நிரந்தர இடம் வகிக்கும் ஐந்து வல்லரசுகளில் உலக ஆதிக்கத்துக்குப் போட்டி யிடும் அமெரிக்காவும், ரஷ் யாவும் தங்களுக்குரிய வீட்டோ அதிகாரத்தை உபயோகித்து சில நல்ல மாற்றங்களைத் தடுப்பதும் உலக அமைதிக்கு இடர் விளைக்கின்றது.

இஸ்ரேலின் அடங்கா அதிகாரவெறி அமெரிக்கா வின் ஆதரவால் மத்திய கிழக்கை ஒரு நிரந்தரப் போர்க்களமாக்கிவிட்டது. ஆப்கான் பிரச்னையும் போலந்தின் ராணுவ ஆட்சி யும் ரஷ்ய தலையீட்டை நிரூபிக்கின்றது.

உலகஅமைதிக்கு முதலாம் எதிரியாகவுள்ளது மூன்றும் உலக நாடுகளில் அதிகரித்து வரும் வறுமையும், பட்டினி யும்.

இத்துறையில் ஐ.நாவின் பல உப கமிட்டிகளும் விசேட ஸ்தாபனங்களும் பெரும் பணியாற்றி வருவ தைப் பெருமையுடன் குறிப் பிடவேண்டும்.

இத்துறைகளிலும் பேர நாடுகள் தங்களுக்கு இசை வான வறிய நாடுகளுக்கே உதவி வழங்குவதும், அற் றைத் தங்கள் ஆதிக்கத் தில் வைத்து தமக்கேற்ற ஆதரவைத்தேடுவதும் இன் னொரு விதமான அமைதி யின்மையை உருவாக்குகின் றது.

செல்வந்த நாடுகள், பார பட்சமின்றி உதவ முன்வ ருவதும், பிணக்குகளைப் பேச்சுவார்த்தைமூலம் தீர்ப் பதில் உறுதி கொள்வதும் இன்றைய நிலையில் இன்றி யமையாத இரு கொள்கை கள்.

மண்டல சார்பற்ற மகா நாடுகள் இந்தப் போக்கை உறுதிப்படுத்த ஒற்றுமைப் படவேண்டும்.

ஐம்பத்து நான்கு ஆண்டுகளாக

வீட்டு வாடகையில் மாற்றமில்லை 30 ஆண்டுகளாகபான், சீனி விலைமாறவில்லை

மாஸ்கோ, அக். 24

சோவியத் யூனியனின் புதிய அரசியல் யாப்பு நிறை வேற்றப்பட்டு ஐந்து ஆண்டுக ளாகவிட்டன இது மக்களது சமூக, பொருளாதார உத்தர வாதங்களின் சீரான வளர்ச் சியை உறுதிப்படுத்தியுள்ளது.

1978ல் சோவியத்நாடு மக்க ளது சமுதாய கலாசாரத் தேவைகளுக்காக 8610 கோடி ரூபிள்களைத் செலவு செய் தது. 1980-ல் இது 9880கோடி ரூபிள் களாகஉயர்ந்துள்ளது. நடப்பாண்டில் இது 10,680 கோடியாக இருக்கும். இது அரசாங்க வரவுசெலவுத் திட் டத்தில் சுமார் மூன்றிலொரு பகுதியாகும்.

அரசாங்க நிதி ஒதுக்கீடுகள் சோவியத் மக்களது கல்விக் கும், மருத்துவ சிகிச்சைக்கும், வீடு பெறுவதற்கும், சமுதாய காப்புறுதிக்குமான உரிமைகள் உட்பட சமூக பொருளாதார உரிமைகளுக்கான உத்தர வாதங்களை அதிகரித்துள்ளது. உணவுப் பண்டங்களதும் தொழில்துறை நுகர்வுப் பொருட்களினதும், விலைக ளும் பொதுஜனச் சேவையின் கட்டணங்களும், பல ஆண்டுக ளாக ஸ்திரமாக இருந்து வரு கின்றன.

கடந்த 54 வருடங்களாக வீட்டு வாடகையில் மாற்ற மெதுவும் ஏற்படவில்லை. மின் சார, போக்குவரத்துக் கட்ட ணங்கள் கட்ந்த 34 ஆண்டுக ளாக மாறவில்லை. பாண், மா, அரிசி, தாவர எண் ணெய், சீனி போன்றவற்றின் விலைகள் 30 ஆண்டுகளாக வும் இறைச்சி பால், பட் டர், மற்றும் இறைச்சி, பால் பொருட்களின் விலைகள் 20 ஆண்டுகளாகவும் அப்படியே இருந்து வருகின்றன.

மக்களது சமூக, பொருளா தார உரிமைகளை மேலும் உத் தரவாதம் செய்வதை நோக் கமாகக் கொண்டே சோவி யத் அரசு வரவுசெலவுத் திட் டத்துக்கான ஒதுக்கீடுகளை அதிகரித்து வருகிறது. 1979-ம் ஆண்டில் மக்களின் ஆரோக் கிய மேம்பாட்டுக் காக சோவியத் பொது சுகாதார அமைப்பு மேற் கொண்ட பணிகள் பெரும் பலனை அளித்துள்ளன. இலவச மருத்துவ நடங்கிய பொதுசுகாதார அமைப்பு மக் களுக்கான சிகிச்சை வசதிகளை அதிகரித்தது. பொது சுகா தார அமைப்பின் பொருளா தார அடிப்படைகளை உறுதிப் படுத்துவதிலேயே அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுத் துள்ளது. இன்று நாட்டில் 10,28,000 மருத்துவர்களும் 3,390 000 ஆஸ்பத்திரிப் படுக் கைகளும்உள்ளன. நடப்பாண் டில் புதிய மருத்துவ மனைகள் கட்டப்பட்டுவருகின்றன.

வீடமைப்புத் துறையில் சோவியத் யூனியன் மிகமுன் னணியில் நிற்பது குறிப்பிடத் தக்கது. ஒவ்வொரு சோவியத் பிரஜையும் வீட்டு வசதியைக் கொண்டிருப்பதை சோவியத் அரசியல் யாப்பு உத்தரவாதப் படுத்துகிறது. நாட்டின் கால் பங்கு நிலம் கட்டடங்களைக் கொண்டிருப்பதுடன் மேலும் 10 கோடி சதுர மீட்டர்களில் வீடுகள் அமைக்கப்பட்டு வரு கின்றன. வீட்டுவசதிகளை மேலும் விருத்தி செய்வதற் காக அரசு கூட்டுறவு அமைப்பு களுக்கும் தனியாருக்கும் உதவி யளித்து வருகிறது.

- 'அவதானி'

மக்கள் கருத்து

குளங்களை ஆழமாக்குவோம்

வட-மாநிலம் வாழ்வதற்கு வானம் பொழியும் மழை வரத் தொடங்கியுள்ளது. இதுவரை பகுத்தறிவில்லாத எறும்புக் கூட்டங்கள், தமக்குவேண்டிய உணவுப் பருக்கைகளைப் புற் றில் சேர்த்து முடித்திருக்கும்.

எல்லா அறிவும், விஞ்ஞான மும் தொழில் நுட்பமும் அறி ந்த மனித குலம் சிறியன சிந் திக்காது பெருமளவில் நட்டம டைகின்றது. இரவு பகலாக உச்சி வெய்யிலிலும் கூட விரை வாகநீரைக்குப் யந்திரங்களைக் கொண்டு கிணறு நீரை இறைத்து வேளாண்மை செய் செய்கின்றனர் எம்மவர்.

கிணறுகள் வற்ற வற்ற விரைதாக ஊறும் வகையுறிந் தும், அதனைச் செய்வதற்கு வாய்ப் பறியாது தயங்குகின்ற னர். இயலிலுள்ள குளங்களை ஆளமாக்கி மழை நீரை நிறை யத் தேக்கி வைத்தால் கிணறு கள் நிறைய ஊறும். நீரும் உவர்த்தன்மை, சவர்தன்மை, படிப்படியாகக் குறைந்து சுத்த நீர்ப் பெருக்கும் சுவையுள்ள நீரும் கிடைக்கும்.

குளங்களை ஆழமாக்கும் பணியை எங்கெங்கே செய்கிறு ர்களோ அவர்களுக் கெல்லாம் இரவலாக நல்ல மண்வெட்டி களும், மண்சுமக்கத் தாச்சிசட் களும் பத்து, இருபது என்று வழங்க மிக்கவைற் தொழில கம் ஆவலோடு எதிர் பார்த்தி ருக்கிறது.

குளங்கள் ஆழமாஞல் நீர்வ ளம் பெருகும், நீர்வளம் பெரு கினால் நிலவளம் பெருகும், நீல வளம் பெருகினால் வேளாண் மை பெருகும், வேளாண்மை பெருகினால் வாழ்வு நலம் பெரு கும்.

— க. கனகராசா —
கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

பாடிட அருள்வாய் வாணி!

பார் புகழ் கலைகளெல்லாம்
வாணியே உன்னில் தோற்றம்
பார் புகழ் கலைகள் தானுன்
பேரெழில் கொஞ்சும் தோற்றம்
பார் புகழ் கலைகளெல்லாம்
வாணியே உன்னைப் போற்றும்
பார் புகழ் கலைகட்கெல்லாம்
உனதருள் நல்கும் ஏற்றம்

நாமலர் தன்னி லென்றும்
நயந்துநீ உறைவாய் வாணி
நாவலர் நவிலும் நல்ல
வாக்கெலாம் நீயே வாணி
நான்முகன் நயந்து கூடும்
நாயகி நீயே வாணி
நான்மறை மொழியும் நல்ல
பொருளெல்லாம் நீயே வாணி

போற்றிடும் கலைகள் கற்று
தேர்ந்திட அருள்வாய் வாணி
போற்றிடும் கலையாலுன்னைப்
போற்றிட அருள்வாய் வாணி
போற்றிடும் தமிழால் உன்னைப்
பாடிட அருள்வாய் வாணி
போற்றிட அறியேன் சூட்டும்
பாக்களால் மகிழ்வாய் வாணி

- முருகு

★ ★ ★

நாளும் தொழுவேன் வாணி பதம்

ஊக்கம் உயர்வு கல்வியுடன்
ஆக்கம் அன்பு செல்வமிவை
கேட்கும் வரங்கள் பலநல்கும்
தாயே வாணி தொழுகின்றேன்!

அன்பு பெருகும் நெஞ்சத்தே
அறங்கள் பெருகும் செய்கையிலே
நன்மை பெருகும் வாழ்வினிலே
நாளும் தொழுவேன் நின்பதமே!

- இ. ரூபன்

★ ★ ★

வாணியொரு வரம்தருவாய்

வாணியொரு வரந்தருவாய்
வாடிநிற்கும் மாந்தரெல்லாம்
நாணிநிற்கும் தலைநிமிர்ந்து
நல்லபடி சிறந்து குறுக்
கோணல் வழிமாற்றிக்
குற்றமிலா வாழ்வு பெறக்
காணும் கனவுகளை
கவிபோழிய வைத்திடுவாய்

நாணிக் கை தொழுது மிக
நல்ல தமிழிசை பாடி
வாணித்திரு நாளில்
வணங்கு கிறேன் உனைத்தாயே
பேணிக் கை தந்தெனது
பிழையாவும் பொறுத்தருளி வாய்
காணிக்கை யாக்குகிறேன்
கற்பனையின் கவியெல்லாம்

--நவ. பாலகோபால்

வன்னி திருமலை மாவட்ட தொகுதி வாரியான முடிவு

வவனியா தொகுதி

ஜே. ஆர் ஜெயவர்த்தனா [ஐ.தே.க]	12,148
ஹெக்டர் கொப்பேகடுவ [சு. க]	9,711
குமார் பொன்னம்பலம் [த. கா]	2378
றோகண விஜய வீர (ம. வி. மு)	1903
கொல்வின் ஆர். டி. சில்வா [ச.ச]	260
வாசுதேவ நாணயக்காரா [ந.ச]	68

முல்லைத்தீவு தொகுதி

ஜே. ஆர். ஜெயவர்த்தனா [ஐ. தே. க)	3,678
ஹெக்டர் கொப்பேகடுவ [சு.க]	5471
குமார் பொன்னம்பலம் [த.கா]	6654
றோகணவிஜேவீரா [ம. வி. மு.]	204
கொல்வின் ஆர். டி. சில்வா [ச.ச]	150
வாசுதேவநாணயக்காரா [ந. ச.]	84

மன்னார் தொகுதி

ஜே. ஆர். ஜெயர்த்தனா [ஐ. தே. க.]	17,008
ஹெக்டர் கொப்பேகடுவ [சு க.]	8039
குமார் பொன்னம்பலம் [த. கா]	1891
றோகணவிஜேவீர [ம.வி.மு.]	279
கொல்வின் ஆர். சில்வா [ச. ச.]	174
வாசுதேவ நாணயக்கார [ந.ச.]	111

திருமலை மாவட்டம்

திருகோணமலை தொகுதி

ஜே .ஆர். ஜெயவர்த்தனா [ஐ. தே. க.]	16,503
ஹெக்டர் கொப்பேகடுவா [சு. க]	5,424
குமார் பொன்னம்பலம் [த. கா.]	5,366
றோகண விஜேவீரா [ம. வி. மு.]	1,305
கொல்வின் ஆர். டி. சில்வா [ச. ச.]	174
வாசுதேவ நாணயக்கார [ந. க.]	100

மூதூர் தொகுதி

ஜே. ஆர் ஜெயவர்த்தனா (ஐ. தே. க.)	14, 529
ஹெக்டர் கொப்பேகடுவ (சு. க.)	12, 900
குமார் பொன்னம்பலம் (த. க.)	2, 764
றோகணவிஜேவீர (ம. வி. மு.)	509
கொல்வின் ஆர். டி. சில்வா (ச. ச.)	228
வாசுதேவநாணயக்கார (ந. ச.)	98

சேருவலை தொகுதி

ஜே. ஆர். ஜெயவர்த்தனா (ஐ. தே. க.)	15, 823
ஹெக்டர் கொப்பேகடுவ (சு. க.)	13, 097
குமார் பொன்னம்பலம் (த. கா.)	1, 708
றோகணவிஜேவீர (ம. வி. மு.)	1, 536
கொல்வின் ஆர். டி. சில்வா (ச. ச.)	211
வாசுதேவநாணயக்காரா (ந. ச.)	80

குறிப்பு; இச் செய்தி சில பதிப்புகளில் வெளிவந்திருக்கிறது.

பொதுத் தேர்தல்:

தேர்தல் ஆணையாளர் தினைக்களம் தயாராகிறது!

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வேலைகளை மேற்கொள்வதில் தேர்தல் ஆணையாளர் தினைக்களம் ஈடுபட்டிருக்கிறது

இதுவரை பொதுத்தேர்தல் வேலைகளில் 50 சத வீதமான வேலைகள் பூர்த்தியடைந்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் தினைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மிகுதி வேலைகளை மேற்கொள்வதில் தேர்தல் ஆணையாளர் தினைக்களம் தற்போது ஈடுபட்டிருக்கிறது.

வாக்குச் சீட்டுகளுக்குத் தேவைப்படும் மை முதலாவது பகுதி பாதுகாப்புக் கடதாசி விரைவில் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படவிருக்கிறது.

(க)

"பொருளாதார வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

இன்று விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் முன்னேறிவரும் உரிய கௌரவத்தை அவர்களுக்கு வழங்குகின்றீர்கள் இல்லையே. இந்த நிலைமையைப் போக்கி ஒருவரை ஒருவர் மதித்து தமிழ் மக்களின் பொருளாதாரவளர்ச்சிக்கு உழைக்கவேண்டும்.

இவ்வாறு தனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவரும் யாழ். மாவட்ட தெ. ப. பொ. உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ செயலாளருமான திரு. க. நடராசா புத்தூர் கலையகம் ச.ச.நிலையத்தில் நடைபெற்ற கலைவிழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

இக்கலைவிழா திரு. அ. பரஞ்சோதி தலைமையில் நடைபெற்றது. யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. ந. இராசேந்திரன் உட்பட பலர் உரையாற்றினார்கள் திரு. க. இராஜதுரை தலைமையில் பட்டிமன்றமும் திரு. க. இராசேஸ்வரன் தலைமையில் அறிவியல் அரங்கமும், பலகலை நிகழ்ச்சிகளும், கிருஷ்ணலீலா புராண நாடகமும் இடம் பெற்றன. அரியாலையூர் திரு. வே. ஐயாத்துரைக்கு "செஞ்சொல் வாரிதி" தவில் வித்துவான் திரு. கி. சின்னத்தம்பிக்கு "கலைக்காவலன்" பட்டங்கள் அளித்துக்கௌரவிக்கப்பட்டது.

(உ)

மாவட்டரீதியில் ஒரு கணிப்பு!

ஐ. தே. க. 14-ல் குறைவு சு. கட்சி 16-ல் அதிகரிப்பு

(கொழும்பு)

1977-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கிடைத்த வாக்குகளிலும் பார்க்க 16 மாவட்டங்களில் சுதந்திர கட்சி கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளது. ஐக்கிய தேசிய கட்சி 8 மாவட்டங்களில் மட்டும், கடந்த பொதுத் தேர்தலிலும் பார்க்கக் கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளது. 14 மாவட்டங்களில் ஐ. தே. க. கடந்த பொதுத் தேர்தலிலும் பார்க்க குறைந்த வாக்குகளைப் பெற்றுள்ளது. சுதந்திர கட்சி 6 மாவட்டங்களில் மட்டுமே, கடந்த பொதுத்தேர்தலிலும் பார்க்க குறைந்த வாக்குகளைப் பெற்றுள்ளது.

வாக்களிப்பு விகிதம் வருமாறு

	ஐ. தே. க.		சுதந்திர கட்சி	
கொழும்பு ...	2.57	குறைவு	... 6.13	அதிகம்
கம்பஹா ...	2.05	குறைவு	... 0.04	அதிகம்
களுத்துறை ...	3.31	குறைவு	... 19.77	அதிகம்
கண்டி ...	6.08	அதிகம்	... 3.65	அதிகம்
மாத்தளை ...	4.73	குறைவு	... 1.99	அதிகம்
நுவரேலியா ...	5.72	அதிகம்	... 0.35	குறைவு
காலி ...	3.86	குறைவு	... 8.91	அதிகம்
மாத்தறை ...	6.12	குறைவு	... 1.04	அதிகம்
அம்பாந்தோட்டை ...	9.72	குறைவு	... 0.66	குறைவு
யாழ்ப்பாணம் ...	17.95	அதிகம்	... 33.94	அதிகம்
வன்னி ...	15.54	அதிகம்	... 32.18	அதிகம்
மட்டக்களப்பு ...	14.59	அதிகம்	... 6.53	குறைவு
திகா மதுள்ள ...	11.92	அதிகம்	... 7.29	அதிகம்
திருகோணமலை ...	1.54	அதிகம்	... 9.78	அதிகம்
குருநாகல் ...	1.04	குறைவு	... 5.70	அதிகம்
புத்தளம் ...	3.39	அதிகம்	... 1.39	குறைவு
அனுராதபுரம் ...	3.45	குறைவு	... 3.38	அதிகம்
பொலநறுவ ...	1.53	குறைவு	... 3.85	குறைவு
பதுளை ...	1.24	குறைவு	... 0.19	அதிகம்
மொனருகல ...	5.36	குறைவு	... 0.03	குறைவு
கேகாலை ...	1.02	குறைவு	... 6.17	அதிகம்
இரத்தினபுரி ...	3.26	குறைவு	... 10.07	அதிகம்

காளி வழிபாட்டிலுல் சகல சிறப்பும் கிட்டும்

வண்-வடமேற்கு ஐயனார் கோவிலடியில் கோவில் கொண்டிருக்கும் சர்வசக்தி மகாகாளி அம்மன் ஆலயத்தில் கும்பாபிஷேக விழா நடைபெறுவதை யொட்டி இச்சிறுகட்டுரை பிரசுரமாகிறது.

சக்திதான் தெய்வத்திற் கெல்லாம் தெய்வம் என சாக்தர்கள் கருதுவர். இந்தவகையிலே ஊர்தேவதைகளில் காளி எனவும் மகாகாளி எனவும் காளியாத்தாள் எனவும் கூறப்படுகின்ற காளிக்கு மிகவும் பழமையான ஒரு ஸ்தானம் இருக்கிறது. தமிழ்நாட்டிலே பேர்பெற்ற பல காவி உருவங்கள் இன்றும் தமிழர்களால் வணங்கப்பட்டுவருகின்றன. தில்லைக்காளி ஒரு காலத்தில் மிகவும் உக்கிரமாயிருந்து பயங்கரமான செயல்களைச் செய்து வந்ததாகவும், சிவபெருமான் அவளுடன் நாட்டிய மாடி அந்த நிருத்தயுத்தத்திலே வென்று அவளை எல்லைகாக்கும் தெய்வமாக்கினர். எனவும் அப்பெருமான் கட்டளைப்படி அக்காளி நடுதிர்த்தத்தில் மூழ்கிக் கோர வடிவம் நீங்கிச் சாந்த வடிவத்தினைப் பெற்றதாக தில்லை மான்மியக் கதைகூறுகிறது.

இக்கதையிலிருந்து காளிவழிபாட்டின் தொன்மையையும் பரிணமத்தையும், அந்த வழிபாட்டை தன்னுடைய ஒரு பகுதியாக்கிக் கொண்ட சிவ வழிபாட்டின் சிறப்பான ஆற்றலையும் நாம் ஊகித்துக் கொள்ள முடிகிறது. காளியின் நாயகன் சிவபெருமான் என்பது பண்டை நூல்களிலிருந்து தெரியவருகிறது. இறைவனே "ஆடல் கண்டருளிய அணிநிழு என்று சிலப்பதிகாரம் காளியைச் சிறப்பித்துக் கூறுகிறது

தெய்வ வழிபாட்டிலே காளி வழிபாடே தொன்மையான தொன்றாகும் பழையஉலகத்தி முக்கிய தேவதையான காளி இருக்குவேதகாத்திற்கும் முற்பட்ட தெய்வம் என்பது மொகஞ்சதாரோ என்ற இடத்தைத் தொல்பொருளிய இலாகாவினர் தோண்டிப் பார்த்தபோது கிடைத்த மிகப் பழைய நாகரிகச் சின்னங்களினின்றும் தெரியவருகிறது. மற்றும் ஆதித்த நல்லூர் புதை பொருள்களில் பெரியவயிறும், முலையும் உள்ள தாய்த் தெய்வத் திருவுருவம் கிடைத்துள்ளது. மணிமேகலையில் வரும் 'காடமர் செல்வி' போன்ற தொடர்கள் எல்லாம் தாய்தெய்வமான காளியைக் குறிக்கின்றன. இத்தகைய காளியானவள் உயிரினங்களாற் புடைசூழப்பெற்றிருந்தாள் என்றும், இவளை காட்டு வாசிகளான சவரர், புளிந்தர் முதலானோர் மணியடித்துத் தொழுதார்கள் என்பது வரலாறாகும்.

சிலப்பதிகார காலத்திற்குப் பின்பும், பரணி நூல்களுக்கும் முன்பும் தோன்றிய காரைக் காலம்மையாரின் பாடல்களிலும் காளியைப் பற்றியும் 'காளிச்சுற்றம்' என்ற பேய்ப்பெருங் கூட்டத்தைப் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. கலிங்கத்துப் பரணி இவற்றைச் சிறப்பாகவும் விரிவாகவும் கூறுகின்றது, சங்ககாலத்து நூல்களிலிருந்து காளியை நீரும நிழலுமற்ற பாலை நிலத்துக்கு தெய்வமாக்கி வழிபட்டு வந்தார்கள் என்பது தெரியவருகிறது. காளிக்குரியதாக பிரசித்தமான நவராத்திரி விழாவும் காளிகோயில்களிலும் சிறப்பாக இன்றும் கொண்டாடப்படுகிறது. காளி வழிபாடு இந்து மதத்தின் ஒரு முதன்மையானது என்பதற்கு மகாபாரதமும் புராணங்களும் ஆகமங்களும் சான்றுபகரும்.

காளி தேவியை உபாசனை செய்வதனால் பெறுதற்கரிய பயனை பெறலாம்என்று சௌந்தரியலகரி கூறுகின்றது ஒருவனைப் பேரழகனாக மாற்றுவதும், தேனினும் இனிய வாக்கு வல்லமை உடையவனாக விளங்கவைப்பதும், ஞானானந்தத்தைப் பெறவைப்பதும் காளி உபாசனையினாலேயே என்பது சங்கராச்சாரியரின் சௌந்தரியலகரி வாக்காகும். ஆகவே காளி பூசை செய்பவர்கள் இவ்வுலகில் எல்லாச் சிறப்பும் பெற்றுப் பெருமையடைவர் என்பது திண்ணம்.

— ப. கணேசலிங்கம்

"மூன்றும் நிலைக்கல்வி நாட்டின் வளத்துக்கு வழிவகுக்கும்"

[யாழ்ப்பாணம்]

"காலற்பட்டகுடி, கச்சேரி நிர்வாகத்திற்கும் அலுவலக வேலைகட்கும் செய்திகொண்டு செல்லவும் பயன்பட்ட கல்வி முறைமை இப்போது பொருத்தமற்றது, சுதந்திரமான ஜனநாயக சோஷலிசக் குடியரசின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் வேண்டிய புதிய கல்வி முறைமை இன்றியமையாதது அத்தகைய கல்வி முறையின் முக்கியமான அம்சங்களில் ஒன்றே மூன்றும் நிலைக்கல்வி முறைமை.

இவ்வாறு யாழ் மத்தியகல்லூரியின் பரிசளிப்பு விழா நிகழ்ச்சியில் கல்லூரி அதிபர் திரு. என், எஸ். இரத்தினசிங்கம் தமது அறிக்கை சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டார், அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

"மூன்றும் நிலைக்கல்வி முறைமையில் எத்தகைய தொழில் முறைகள் தொழில் நுட்ப முறைகள் இடம்பெற வேண்டும்' என்பதனைப்பற்றி இச்சந்தர்ப்பத்தில் ஓர் அபிப்பிராயத்தைக் கூறுவது பொருத்தமாயிருக்கும்.

அபிவிருத்தியடைந்த மேற்கத்திய நாடுகளிற் காணப்படும் உரும்படியாக்க உற்பத்தி முறைகளும் எமதுநாடுகளுக்கு ஏற்றனவல்ல. பொருளியல் அறிஞர் கலாநிதி ஈ, எவ், சூமேச்சர் "சிறியது அழகானது" என்ற நூலை வெளியிட்ட பின்பே இக்கருத்து உலக அரங்கிற் பிரபலயம் அடைந்தது எனினும் இது ஒரு புதிய கருத்தன்று மகாத்மா காந்தி அடிகள் இக்

[8ம் பக்கம் பார்க]

உதவி மாவட்ட சாரண ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்றதற்காக திரு சு ஏகாம்பரநாதனுக்கும் திரு. இ. தவகோபாலுக்கும் பாராட்டுப்பத்திரங்களைத் திரு க. சச்சிதானந்தமும் திரு எஸ். கந்தமூர்த்தியும் வழங்கினர்கள். அருகாமையில் திரிசாரணத் தலைவர் திரு. அ. ராஜூவும் காணப்படுகிறார்.

மன்னார் குடிநீர் விநியோகம்

பாரதி விழா

(மன்னார்)

மன்னார்–வலிகாலையில் 29–ம் திகதி பாரதி நூற்றாண்டுவிழா கொண்டாடப்படும். இதற்கான ஏற்பாடுகளை அதிபர் திரு. சவரியான் லெம்பேட், திரு. ரி பீரிஸ் ஆகியோர்மேற் கொண்டு வருகின்றனர்.

இவ்விழாவை முன்னிட்டு பொதுஅறிவும், மெய்வல்லுநர் போட்டிகளும் மலர் வெளியீடும் இடம் பெறும்.

ஃ ஃ

மன்னார் பட்டினத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் 1500 கலன் நீர்கொள்ளக் கூடிய பாரிய நீர்த்தாங்கியிலிருந்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் மன்னார் பட்டினத்திற்கான குடிநீர் விநியோகம் நடைபெறும். புதிய நீர்த்தாங்கியிலிருந்து மன்னார் பட்டினத்திற்கான குடிநீர் விநியோகத்தை பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா ஆரம்பித்து வைப்பார். இதன்மூலம் மன்னார்பட்டினத்தில் இதுவரைகாலமும் நிலவி வந்த குடிநீர்த் தட்டுப்பாடு நீங்கி விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

துறைமுக மேம்பாலம்

தலைமன்னார் துறைமுகத்தில் அமைக்கப்பட்டுவரும் மேம்பாலத்தை நவம்பர் மாதம் பிற்பகுதியில் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகமட் திறந்துவைப்பார்.

இதேதினம் போக்குவரத்து அமைச்சர் மன்னாரில் பல்லாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நவீனபஸ்சாலையையும், தோட்ட வெளி ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரயாணிகள் தங்குமிடத்தையும் திறந்து வைப்பார்.

வாணி விழா

[யாழ்ப்பாணம்]

ஏழாலை மகாவித்தியாலயத்தில் இந்துமாமன்றத்தின் வாணிவிழா இம்மாதம் 27–ம் திகதி நடைபெறவிருக்கிறது. கூட்டுப்பிரார்த்தனை, கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். [க]

தலைமன்னார்–ராமேஸ்வரம்

ஞாயிறும் கப்பல்சேவை நடத்தப்பட்டது

[மன்னார்]

தலைமன்னார் துறைமுகத்தினூடாக இந்தியாவுக்குச்செல்லும் பிரயாணிகளின் தொகை அதிகரித்ததால் கடந்த சனிக்கிழமையுடன் இடைநிறுத்தப்படவிருந்த தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல்சேவை கடந்த ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றது.

கடந்த சில தினங்களாக இயங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரின் தொகை அதிகரித்ததாலேயே தலைமன்னார் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான இந்திய உல்லாசப்பணிகள் கப்பலில் இடம் கிடைக்காது காத்திருந்தனர் இதனால் கடந்த வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய இருநாட்களும் விசேட கப்பல்சேவை நடத்தப்பட்டதுடன், கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலும், மாலையிலுமாக இரு கப்பல்சேவை நடத்தப்பட்டது.

இவ்வருடம் ஞாயிற்றுக்கிழமை கப்பல் சேவை நடத்தியது இதுவே முதல்தடவையாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட கப்பல் சேவையுடன் தலைமன்னார்–ராமேஸ்வரம் கப்பல்சேவை இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

காலநிலைசீர்கேடு காரணமாக இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள தலைமன்னார்–ராமேஸ்வரம் கப்பல்சேவை மீண்டும் அடுத்தவருடம் ஜனவரிமாதம் 3ந் திகதி ஆரம்பமாகும்.

ரயில்நிலைய அதிபர்கள் இடமாற்றம்

(மன்னார்)

தலைமன்னார் ரயில்நிலைய அதிபர் திரு. எஸ் சின்னத்துரை ஜனவரி மாதமுதல் பளை ரயில் நிலைய அதிபராக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்குகோட்டை ரயில் நிலைய அதிபராகக் கடமையாற்றும் திரு. வி. தெய்வேந்திரன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முருங்கன் ரக்வேநிலைய அதிபராகக்கடமையாற்றும் திரு. பி. கண்ணதரன் தெமோதர ரயில் நிலைய அதிபராக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு சுன்னகம் ரயில்நிலைய அதிபராகக்கடமையாற்றிவரும் திரு. ஏ. துரைரத்தினசிங்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தலைமன்னார் பியர் ரயில் நிலைய அதிபர் திரு. ஆர். நடேசன் மருதானையில் நிலைய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார், இவரது இடத்திற்கு சரசவி உயன்ன ரயில் நிலைய அதிபர் திரு கே. வேலாயுதம்பிள்ளை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மருதானை ரயில்நிலைய அதிபராகக்கடமையாற்றும்திரு கே இராஜலிங்கம் வெள்ளவாயா ரயில் நிலைய அதிபராக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். வெள்ளவாயரயில்நிலைய அதிபராகக் கடமையாற்றும் திரு. எம். என்.கி. மகேசன் கொடிகாமம் ரயில் நிலைய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை ரயில்நிலைய அதிபராகக் கடமையாற்றும் திரு. ஆர். எம், ஏ. பி தசநாயக்கா பட்டிப்பொல ரயில்நிலைய அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு பல்லேகல ரயில்நிலைய அதிபராகக் கடமையாற்றிய திரு. டீ. எம். பி. திசநாயக்கா இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

இரு புதிய சமாதான நீதிபதிகள்

டாக்டர் ஜே. பி. சி. பிலிப், திரு. இசட் சிங்கராயர் ஆகியோர் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதிபதிகளாகக் கடந்தவாரம் யாழ். மேல்நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

டாக்டர் பிலிப்

டாக்டர் பிலிப் யாழ்.மக்களிடையே மிகபிரபல்யமுடைய ஒருவர். இவருடைய சேவைகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை வைத்தியத் துறையிலாற்றிய– ஆற்றிவருகின்ற பணிகள், சமூகமறுமலர்ச்சிப் பணிகள் விளையாட்டுத்துறைப்பணிகள் என்பனவாகும்.

இலங்கை புற்று நோய்த்தடுப்புச்சங்க உபதலைவராகவும், இவர் திகழ்கிறார். யாழ்.பெரியாஸ்பத்திரியில் புற்றுநோய் தடுப்புக்கழக உப–தலைவராகவும், யாழ்.புற்றுநோய் தடுப்புப் பிரிவு ஒன்றை அமைக்க எடுக்கப்படும் முயற்சிகளில் இவருக்கு நிறையப்பங்குண்டு. ஆஸ்பத்திரிக்குழு உறுப்பினர்களில் ஒருவரான இவர் கிறிஸ்தவ சங்கங்கள் பலவற்றில் முக்கிய பங்கினை வகிக்கின்றார். யாழ். ஆனைக்கோவில் கட்டிட அமைப்புக் குழுவின் தலைவராகவும், யாழ்ப்பாணப் பங்கு சங்கத்தின் தலைவராகவும், டயோசியன் சங்கத் தலைவராகவும், அகில இலங்கை கத்தோலிக்க ஒன்றியத்தின் உபதலைவராகவும் விளங்கும் டாக்டர் பிலிப் மிகுந்த ஆர்வம் பற்றும் சமூகசேவை உணர்வும் கொண்டவர்.

சம்பத்திரிசியகல்லூரிப்பழைய மாணவரான இவர் சம்பத்திரிசிய கல்லூரிப் பழையமாணவர் சங்க உபதலைவராகவும், பத்திரிசிய கழகத்தின் தலைவராகவும் பத்திரிசிய நிறுவனத்தலைவராகவும் இருந்துவருகிறார்.



விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரை யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சங்கம். கிரிக்கெட் சங்கம் போன்றவற்றின் தலைவராகவும் இவர் திகழ்கிறார். புனிதவளன் ஸ்போட்ஸ் கிளப் ஸ்தாபகரும் இவரே.

கல்வித்துறையில் யாழ் நவரசநாட்டுக்கூத்து கலாமன்ற ஆலோசகராகவும் புங்குடுதீவு வீரமாமுனிவர் கழகத்தலைவராகவும் விளங்குகின்றார். இவ்வாறுக சகல துறைகளிலும் மக்கள் பணிசெய்யும் இவர் தற்போது இலங்கை முழுவதற்குமான புதிய சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

திரு. இட். சிங்கராயர்

சம்பத்திரிசியார் கல்லூரியின் புகழ்பூத்த மலர்களில் ஒன்றான திரு இசட் சிங்கராயரின் பணியை சமூகப்பணி விளையாட்டுத் துறைப் பணி என இரு பிரிவுகளாகப்பிரிக்கலாம்.

குருநகர் சென்.றோச் சனசமூக நிலைய முன்னாள் தலைவராகவும், யாழ் சிறைச்சாலை சந்திப்புகுழுவின் நாலுவருட அங்கத்தவராகவும், குருநகர் பொலிசாரின் பொது மக்கள் குழு உறுப்பினராகவும், மக்கள் கமிட்டித் தலைவராகவும் பல்வேறு வடிவங்களில் இருபத்திரண்டு வருடங்களாக இலர் சமூகபணியாற்றி வருகிறார்.

யாழ். கிரிக்கட் நடுவர்கள் சங்க ஸ்தாபகர்களில் ஒருவரான இவர் இச்சங்கத்தின் தலைவராகவும் காரியதரிசியகவும் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். யாழ். உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசியாகவும் யாழ் உதைபந்தாட்ட நடுவர்சங்கத் தலைவராகவும் விளங்கிய இவர் யாழ். உதைபந்தாட்டக் குழுவின் பயிற்சியாளராகவும், யாழ். சம்பத்திரியார் கல்லூரிக் குழுவின் பயிற்சியாளராகவும். உதைபந்தாட்ட அபிவிருத்தித் திட்டக்குழுவின் உறுப்பினராகவும் பலவகைகளில் விளையாட்டுத்துறைக்குப் பெரும்பணியாற்றியுள்ளார். இவர் சம்பத்திரிசிய கிரிக்கெட் குழுவுக்கு 1946ல் விளையாடுகையில் யாழ். மத்திய கல்லூரியுடன் 252 ஓட்டங்களை ஆரம்ப விக்கட்பார்ட்னர் சிறப்பாக எடுத்துச்சாதனையை நிலைநாட்டினார்.



இவ்வாறுக விளையாட்டுத்

(7–ம் பக்கம் பார்க்க)

எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு
விசேட கழிவுடன்
★ சொனி (Sony)
★ நாஸனல் (National)
★ சன்யோ (Sanyo)
★ சிரு டெலிவிஷன்களை
பெற்றுக்கொள்ளவும்.
சென்னை ரூபவாகினி ஏரியல்
உத்தரவாதத்துடன் பொருத்திக்கொள்ளவும்.
மற்றும்
உங்கள் வீட்டு மங்கள வைபவங்களை
வீடியோவில்
படம் பிடித்துக்கொள்ளவும்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்,
ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்,
யாழ்ப்பாணம்.

நீகல் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30
6-30, 9-30
ரஜனிகாந்த்-ரதி
முரட்டுக்காளை
(கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-காஞ்சனா
காதலிக்க
நேரமில்லை
(புதிய பிரதி) (கலர்)

சில தினங்கள் மட்டும்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஷா நவாஸ் - சுமதி
பாதை மாறிய
பருவங்கள்
விரைவில்! எம்.ஜி.ஆர்.
நவரத்தினம் (கலர்)

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ்-பானுமதி
கானல் நீர்
நாளை முதல் அல்லி
29-10-82 முதல்
அழகே உன்னை
ஆராதிக்கிறேன்

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
போடியார்- அடி பிள்ளை
பாரதிராஜா, பாலசந்தர்
படங்கள் எல்லாத்தையும்
தூக்கி எறிஞ்சுபோட்
டார் பாக்கியராஜ்.
தங்கம்மா- அம்மான்அதில்
முக்கியம் என்ன தெரி
யுமா சுட்டிப் பயல்
நடிப்பு ஏ ஒன்.
பாக்கியராஜ்-சரிதா
மௌன
கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
லவகுசா
பாடசாலை மாணவர்க்கு
விசேட ஒழுங்குசெய்து
தரப்படும்

வின்ஸர் கடைசி மூன்று தினங்களில்மட்டும்
(யாழ். நகர்) 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ் நகர்)
சுந்தரராஜன் - பத்மினி
பெண் தெய்வம்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
கல்யாணகுமார் - முத்துராமன் - தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்
[யாழ்.நகரில் கடைசி முறையாகக் காண்பிக்கப்படுகிறது]
(புதிய பிரதி)

பரி. யோவான் வெற்றி

(அரியாலை

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும், யாழ் பரியோவான் கல்லூரிக்குமிடையே பரி யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இரண்டாம் பிரிவுப் போட்டியில் 4:1 கோல்களாலும், மூன்றும் பிரிவுப் போட்டியில் 3:1 கோல்களாலும் பரி, யோவான் கல்லூரி வெற்றிபெற்றது.

★

(அரியாலை]

உரும்பிராய் இந்துக்கல் லூரிக்கும், யாழ் – பரியோவான் கல்லூரிக்குமிடையில் உரும்பிராய் இந்துக்கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் முதலாம் பிரிவுப்போட்டியில் 3:1 கோல்களாலும், இரண்டாம் பிரிவில் 2:1 கோல்களாலும், மூன்றும் பிரிவுக்கான போட்டியில் 3:1 கோல்களாலும் பரி. யோவான் கல்லூரி வெற்றி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி வெற்றி

(அரியாலை)

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்கும யாழ்.பரியோவான்கல்லூரி குமிடையில்பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வருடாந்த உதைபந்தாட்டப்போட்டியில் முதலாவது பிரிவுக்கான போட்டியில் 3;1 கோல்களால் யாழ் மத்திய கல்லூரி வெற்றியீட்டியது.

இரண்டாம் பிரிவுக்கான போட்டியில் 2:1 கோல்களாலும், மூன்றும் பிரிவுக்கான போட்டியில் 1:0 கோலாலும் பரி. யோவான்கல்லூரிவெற்றி பெற்றது.

நன்றி

(யாழ்ப்பாணம்)

ஜனதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு, வடக்கு கிழக்குமாகாணங்களில் உள்ள அரசாங்க வைத்தியசாலை ஊழியர்கள் ஆதரவளித்ததுகுறித்து தேசிய சுகாதார சேவைப்பொது ஊழியர்சங்கச் செயலாளர் திரு. கே. செல்வராசா நன்றி தெரிவித்து அறிக்கையொன்றை விடுத்துள்ளார். (மா)

பொதுத் தேர்தலில் வெளிநாட்டிலுள்ள 4லட்சம்பேர் வாக்களிக்கவசதி

[கொழும்பு]

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ள இலங்கையர்களுக்கு அடுத்து நடைபெறும் பொதுத்தேர்தலில் தபால்மூலம்வாக்களிக்க வசதிசெய்து கொடுப்பதுபற்றி ஆராயப்பட்டுவருகிறது.

இலங்கையைச் சேர்ந்த சுமார் 4 லட்சம் வாக்காளர்கள் தற்பொழுது வெளிநாடுகளில் தொழில்புரிந்துவருகிறார்கள்.

இவர்களது வாக்குகளை ஜனதிபதி தேர்தலில் பெறமுடியாதுபோய்விட்டதாகப் பிரதமர் ஆர் பிரேமதாசா தெரிவித்துள்ளார். அவ்வாறு பெற்றிருப்போமானால் கூறுதலான வாக்குகள் கிடைத்திருக்குமென்றும் அவர் கூறினார். (க)

இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 8-ம் திகதி

திங்கட்கிழமை

(25—10—82)

மேடம்: நல்லதைச் செய்ய விரும்புவீர்கள், நலனும் பெருகும், பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள், சமூகத்தில் மதிப்பும் உயரும்.

இடபம்: செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும், மேலதிகாரிகளின் ஆதரவு பெருகும், சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களும் கிடைக்கலாம், குடும்பத்தில் நல்ல திருப்பம் காணப்படும்.

மிதுனம்; அன்னிய வாசம் அமைதிக்கு உலைவைக்கும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானமாக இருக்கவும், தெய்வ நம்பிக்கை சிறந்த பலனை அளிக்கும்.

கடகம்: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் இடம்பெறும். எதிர்ப்புக்கள் மறைந்து எதிலும் சாதாரணமான சூழ்நிலை உருவாகும்.

சிங்கம்: மிகவும் வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடும், அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும், சகோதர வழியாலும் சஞ்சலம் ஏற்படலாம்.

கன்னி: இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல், பிதாவழி ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், செய்தொழிலால் சிறப்பும் உண்டாம்.

துலாம்: கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும், எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள், சிலருக்கு நன்மையான இடமாற்றமும் ஏற்படலாம்.

விருச்சிகம்; மெத்தவும் பொருள்சேரும், மேலிடத்து ஆதரவு தவறாமல் கிடைக்கும், தித்திக்கும் செய்தியுடன் தேனான வாழ்வும் உண்டாம்.

தனுசு: பலவழிகளிலும் தொல்லைகள் தோன்றும், விரக்தி மனப்பான்மையுடன் நடமாடுவீர்கள், தொழில்புரியும் இடத்தில் எதிரிகள் மறைமுக நடவடிக்கைகளில் இறங்குவர்.

மகரம்: அவசரப் புத்தியினால் விபரீதங்கள் விளையலாம் கோபத்தை அடக்கின் நிலமை சீர்பெறும்; அடக்கமாக இருக்கவும்.

கும்பம்: பெரிய இடத்து சிநேகிதம் இன்று ஏற்படலாம் புது வழிகளின்மூலம் பணம் கிடைக்கலாம், குடும்பத்தில் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு.

மீனம்: குறைகேட்க நேரிடும், கடமையில் தடைகள் தோன்றும், நஷ்டம் அடைவதற்கு இடமுண்டு, உடல் நலிவு தோன்றும், நாவடக்கம் நன்று.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

"பொதுஇடங்களில் பாகுபாடு காட்டுவது அநாகரிகம்"

திட்டமிடல் அதிகாரி கூறுகிறார்

(யாழ்ப்பாணம்]

"மக்களை சமூக ஏற்றதாழ்வு அடிப்படையில் ஒதுக்கி வைப்பது, பொதுஇடங்களில் பாகுபாடு காண்பிப்பது மிகவும் அநாகரிகமானது. வழிபாட்டுத்தலங்களில் பாகுபாடு காண்பிப்பது. ஒரு கூட்டத்தாரை ஒதுக்கிவைப்பது மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டும். இவற்றை நமது மத்தியில் இருந்து நீக்க பொருளாதாரத்திலும், கல்வியிலும் முன்னேற்றம் காண்பதன் மூலமே சமூகக் குறைபாடுகளை அழிக்கலாம்"

இவ்வாறு யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. எஸ், சுவாமிநாதன் கரவெட்டி மேற்கு உச்சில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவில் பிரதமவிருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

கரவெட்டி உச்சில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழாவையும், பாரதி நூற்றாண்டையொட்டிய பரிசளிப்புவிழாவையும் உச்சில் கி. அ. சங்கமும், இளைஞர் கழகமும், உச்சில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து கொண்டாடின. இவ்விழா கரவை-முங்கோடை முருகன் ஆலய முன்றலில் உச்சில் கிராமஅபிவிருத்திச்சபைத் தலைவர் ஆசிரியர் திரு. வா. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. எஸ். சுவாமிநாதன் விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார் யாழ்: மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு எஸ். ராஜேந்திரன் இவ்விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"பின்தங்கிய உச்சில் கிராம மக்கள் இன்று முன்னின்று நடாத்தும் இவ்விழா மூலம் தமது கிராமத்தின் ஒற்றுமை மூலம் அபிவிருத்திக்கு அடித்தளம் அமைத்துள்ளார்கள். இப்பகுதியின் முன்னேற்றத்துக்கும், அபிவிருத்திக்கும் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை மூலம் பாடுபடுவேன் என்று உறுதி செய்கின்றேன் என்றார்.

இவ்விழாவில் ஆசிரியர் திரு. க. செல்வத்தம்பி, ஆசிரியர் திரு. வ. கந்தசாமி, மெதடிஸ்த சபை சிறுவர் பாடசாலையின்பொறுப்பாசிரியை திருமதி ஜெபரட்ணம், முங்கோடை பரிபாலன சபை செயலாளர் திரு. க. நாகமுத்து, உச்சில் மாதர் சங்க செயலாளர் செல்வி அ. கமலவதனி ஆகியோரும் உரையாற்றினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (உ

10 முக பட்ஜட்'டில்

கல்வி வளர்ச்சிக்கு பெரும்பகுதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்கள் விளையாட்டுக்கள் கலை கலாச்சார வளர்ச்சியோடு கல்வி வளர்ச்சியில் தமது கவனத்தைத் தீவிரமாகச் செலுத்தி மக்களின் எதிர்காலத்தை வளப்படுத்தவும், வாழ்க்கை உறுதிப்பாடு அடையவும் செயல்படுதல் அவசியமாகும்.

இவ்வாறு கோப்பாய் எம்.பி திரு. மு. ஆலாலசுந்தரம் புத்தூர் கலையகம் சனசமூக நிலையத்தின் 34-வது ஆண்டு நிறைவுவிழாவின் விளையாட்டுப்போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். திரு. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. ஆலாலசுந்தரம் மேலும் தமது உரையில் கூறியதாவது:

"இன்றைய காலச் சூழலில் தமிழ் மக்களின் உயர்கல்வி வாய்ப்புக்கும் பெருப் சவாலாக அமைந்துவிளது. நமது கல்வி வளர்ச்சியில் நாமே அக்கறையுடன் செயல்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம். தமிழ் மக்கள் சுயமுயற்சியால் தம் திறமையினால் கடந்த காலங்களில் உயர்நிலை பெற்றனர். கல்வி, தொழில் வாய்ப்புகளை நாமே எமது சுயமுயற்சியிலும், கடின உழைப்பாலும் முன்னேற்றங் காணவேண்டும். இதற்கு சனசமூக நிலையங்கள் கூடிய பங்களிப்புகளைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

எனது தொகுதியில் வாழும் உங்களுக்கு வேண்டிய அவசிய தேவைகளையோ சேவைகளையோ நிறைவேற்றி வைக்கவேண்டியவனாக உள்ளேன். பன்முக வரவு-செலவுத் திட்டத்தில்பெரும் பகுதியை கல்வி வளர்ச்சிக்காக பாடசாலைகளின் அபிவிருத்திக்குச் செலவிட்டு மிகுதி சொற்பத் தொகையில் வீதி அமைப்பு, மின்வசதி,தொழில் வாய்ப்பு வசதிகளை உருவாக்க நிதி ஒதுக்கீடு செய்கின்றது"

யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். மரியதாஸ் உட்பட்ப் பலர் கலந்து கொண்டனர். (உ

திரு. இசட் சிங்கராயர்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

துறைக்கும் சமூகப்பணிக்கும் பெரும்பணியாற்றிய இவரைச் சமாதான நீதிபதியாக உயர்த்தி அரசு கௌரவித்துள்ளது.

-பற்றிமாகரன்

இளம் மனைவியின் பரிதாபமுடிவு

(மட்டுவில்)

பொங்கல் நேர்த்திக் கடனை நிறைவேற்றக் கணவன் இரண்டு பிள்ளைகளுடன்கோவிலுக்குச் சென்றார். மனைவிக்கோ மனவிரக்தி தனது இளைய பிள்ளையை விடுத்த வீட்டில் கொடுத்துவிட்டு, நஞ்சிடம் தஞ்சமடைந்தார்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான தவயோகேஸ்வரி தர்மலிங்கம் என்னும்பெண்ணே(30 வயது) மரணமானவராகும்.

சாவகச்சேரிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு.எஸ்.தர்மேந்திரன் மரண விசாரணை நடத்தினார். விசாரணையின்போது அடுத்தவீட்டு அன்னபூரணம், இராசேஸ்வரி, இறந்தவரின் கணவன் தர்மலிங்கம் ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

தர்மலிங்கம் தனது சாட்சியத்தில்: ''சம்பவதினம் எனது மனைவிைய முரசுமோட்டை பாலையடி பிள்ளையார் ஆலயத்திற்கு பொங்கல் வழிபாட்டிற்கு வருமாறு அழைத்தேன். அதற்கு அவா மறுத்தார். அப்பொழுது என்னுடைய மூத்த பிள்ளைகள் இருவரையும் அழைத்துக்கொண்டு கோவிலுக்குப் புறப்படும்போது, மனைவி வந்து தானும் கோவிலுக்கு வரப்போவதாகத் தெரிவித்தார். அப்பொழுது நான் மனைவியிடம் ''இப்பொழுது கூறி என்னபயன்? இனி காரும் பிடிக்க முடியாது. ஆகவே அடுத்த பயணம் பார்த்துக் கொள்வோம் பஸ்ஸில் போவது கஷ்டம்'' என்று கூறிவிட்டு நான் சென்றுவிட்டேன். நான் ஆலயத்திற்குச் சென்றதும், எனது மனைவி குழந்தையை அடுத்த வீட்டில் கொடுத்து விட்டு, சமையல் முடிந்ததும் அழைத்துப்போவதாகக் கூறிவிட்டுச் சென்றாராம். ஆனால் அவர் அதன்பின் சந்தைக்குச் சென்று கிருமி நாசினி வாங்கி குடித்துவிட்டதாகத் தெரியவந்தது'' என்றார்.

சாட்சியங்களைப்பதிவுசெய்து கொண்ட மரண விசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

நாட்டின்...

(5–ம் பக்கச் தொடர்ச்சி)

கருத்தை முன்பே வெளியிட்டுள்ளார். கதராடை இயக்கத்தின் முன்னணியிலும் வார்தா கல்விமுறையிலும் இக்கருத்துகள் அடங்கியிருப்பதைக்காணலாம். பெருந்தொகைபொருள் உற்பத்தி முறையிலும் பார்க்கப் பெருந்தொகையானோர் உற்பத்தியிலீடுபடுவது உகந்தது என விளக்கினர். மூன்றாவது கல்வி முறைமை என நாம் அமைக்கவிருக்கும் கல்விக்குவேண்டிய தொழில் முறைகளும் தொழில் நுட்ப நெறிகளும் எமது நாட்டிற்கு ''ஏற்ற தொழில் நுட்பங்களாக'' அமைய வேண்டும்.

''ஏற்ற தொழில் நுட்பம்'' என்ற கருதுகோள் பொருளியல் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவது. ஏற்ற தொழில் நுட்பம்'' என்பது இடைத்தரத் தொழில் நுட்பத்தைக் குறிக்கவில்லை. சிறு தொழில்களுக்கு வேண்டிய இலகு தொழில்நுட்பம், இடைத்தரத்தொழில் நுட்பம் உயர்தர சிக்கலான தொழில் நுட்பம் ஆகியனவும் அதில் அடங்கலாம்

ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் பொருளாதார நிலை, மூலவளம், மனிதசக்தி வேலையின்மை செய்திறன் முதலிய வற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதே ''ஏற்ற தொழில் நுட்பம்'' ஆகும்.

அண்மையில் நாட்டிற்கு வெளியிடப்பட்ட கல்விச்சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகளைக் கொண்டவெள்ளை அறிக்கையில் தொழில் முறை தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு மூக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்ற தொழில்நுட்பம் எமது நாடுபோன்ற குறைஅபிவிருத்தி நாடுகளில் சுயபூர்த்தி சுயமரியாதை, தன்னம்பிக்கை ஆகியனவை வளர்க்கும் ஏற்ற தொழில் நுட்பம் சூழலை மாசுபடுத்தாது தேசியசெல்வத்தை சிதைக்காது நாட்டின் பண்பாட்டை மாற்றாது தொழிற் செறிவுடையது மலிவானது.

இவ்வைபவத்தில் யாழ். பிரதேசக் கல்வியதிபதி திரு. ம. சிமியாம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார் பரிசில்களை திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளை வழங்கினார். வரவேற்புரையை கல்லூரியின் சிரேஷ்ட மாணவர் தலைவர் செல்வன் எஸ். பிரகாஷ்பதிமநாதனும், நன்றியுரையை வைத்தியக்கலாநிதி எஸ். எஸ்.சேனதிராஜாவும் வழங்கினார்கள்.

தமிழ்–ஆங்கிலப் பேச்சுக்களும், கல்லூரி வாத்தியக் குழுவினரின் தேசிய கீதமும் இடம்பெற்றன. [உ.–மா.

ஹோம் பினன்ஸ் லிமிட்
(யாழ்ப்பாணம்)

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பினன்ஸ் லிமிட், 82, கன்னதிட்டி வீதியிலுள்ள ஹோம் பினன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பினன்ஸ் லிமிட்
82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

ஹோம் பினன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3

கம்யூனிஸ்ட்கட்சி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''**'சுதந்திரன்' பத்திரிகை அச்சகத்துக்கு 'சீல்' வைக்கப்பட்டது இன்றைய அரசின் சர்வாதிகாரப் போக்கை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது**'' என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக்குழு செயலாளர் திரு. பொன். குமாரசாமி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்,

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''**சகல பகுதி மக்களினதும் அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் பாதுகாக்கப்படுவதாக ஜனதிபதி தேர்தல் காலங்களில் அறுதியிட்டு கூறப்பட்டது. ஆனால் தேர்தல் முடியுமுன்பே மேற்படி அச்சகம் 'சீல்'வைக்கப்பட்டுள்ளது இச் செயலை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் குழு வன்மையாகக் கண்டிக்கின்றது. அப் பத்திரிகை தொடர்ந்தும் வெளிவரவும் பத்திரிகா தர்மம் பாதுகாக்கப்படவும் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்**'' (மா)

100 கோடி டாலர் செலவில் திட்டம்

டாக்கா, அக். 24

பங்களாதேஷில் கிராமப்புற நிர்வாகத்தை பன்முகப்படுத்தி சீர்திருத்துவதற்காக 100கோடி டாலர் செலவில் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. [வெ]

எண்ணெய், நிலவாயு கண்டு பிடிப்பு

புதுடில்லி, அக். 24

ஆந்திரா பிரதேசத்திலுள்ள கோதாவரி நதிக்கரையில் எண்ணெய்யும், நிலவாயுவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

குமாரின்....

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

கடைசி நாளில் தமிழ் மக்கள் மத்தியில் விநியோகித்தும் கணிசமான வாக்குகளைப்பெற முடியவில்லையே''என்று குறிப்பிட்ட திரு. அமிர்தலிங்கம்; தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, யாழ். மாவட்டத்தில் அரை வாசிக்கு மேற்பட்டவர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்றும், வன்னி மாவட்டத்தில் முப்பத்து நான்கு வீதத்தினரும், திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் 30 வீதத்தினரும் வாக்களிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

''திரு. குமார் பொன்னம் பலத்துக்கு எதிராக வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கை சரியாயின் தமிழீழ விடுதலை கோரி அவர்கள் நிற்கிறார்கள் என்பது புலனாகும்' என்றும் திரு. அமிர்தலிங்கம் சொன்னார். [மா]

கூட்டணியின்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டதோடு, ஜனதிபதி தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொண்டுள்ள நிலைப்பாட்டையும் அறிந்து அங்கு வாழும் தமிழர் திருப்தியடைந்துள்ளனர் என்று திரு நவரத்தினம் எம். பி. நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இந்தியாவில் பல முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து இந்தியா சென்றுள்ள இந்திய வம்சாவழித் தமிழர்களின் புனர்வாழ்வுக்கான நடவடிக்கைகளையும் தரம் மேற்கொண்டுள்ளதாக திரு. நவரத்தினம் தெரிவித்தார்.

இப்படியும் நடக்கிறது

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் 'ரெக்கட்' வேகத்தில் இப்பொழுது 'அபிவிருத்தி' அடைந்து வருவது, சாட்சாத் புகைத்தல்தான்!

புகைத்தல் சம்பந்தமாக உலக சுகாதார நிறுவனம் 'திடுதிப்' என்று ஒரு புள்ளி விபரம் மேற்கொண்டபோது, இதன் எதிரொலி பயங்கரமாக இருந்தது.

ஆசிய நாடான பங்களாதேஷில், எழுபத்து ஒரு சதவீதமான ஆண்கள் ஊதித்தள்ளுகின்றார்கள்!

சீனாவிலும், இலங்கையிலும ஐம்பது சத வீதம். தாய்லாந்தில் இருபது சதவீதம்.

ஆச்சரியம்!

பங்களாதேஷில் இருபது சதவீதமான பெண்கள் புகைக்க, சீனாவில் ஒரு சத வீதமும், இலங்கையில் இரண்டு சதவீதமும், தாய்லந்தில் மூன்று சதவீதமும்தான் பெண்கள் புகைக்கும் அனுபவிக்கின்றார்கள்!

இவற்றிலும் இலங்கை தமிழ்ப்பகுதிகளில் பெண்கள் புகைப்பது...பூஜ்யம் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது!

'ஊடுருவி'

'சுதந்திரன்' ரிட் மனு: இன்று விசாரணை

[கொழும்பு]

''சுதந்திரன்'' பத்திரிகை சீல் வைக்கப்பட்டது சட்ட விரோதமான செயலென தீர்ப்பளிக்கும்படி கோரி தாக்கல் செய்யப்பட்ட 'ரிட்' மனு விசாரணை கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று நடைபெறவுள்ளது.

சுதந்திரன் பத்திரிகையை வெளியிடும் நிறுவனத்தின் சார்பில் இம் மனுவை சட்டத்தரணி எஸ். பேரின்பநாயகம் தாக்கல் செய்திருந்தார்.

இந்த ரிட்மனுவில் ராஜாங்க அமைச்சரின் செயலாளர் திரு. டென் ஜோன் பிரான்ஸிஸ் லியனகே, பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் ஆகிய இருவரும் மூதலாம், இரண்டாம் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

3 அரசு எம். பி.க்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

ஜனதிபதி தேர்தலின்போது ஒழுங்கீனமாக நடந்து கொண்ட மூன்று அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக அரசாங்கத்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கோஷ்டிச் சண்டையொன்றில் கலந்துகொண்டு தாக்குதலில் ஈடுபட்டதற்காக பொலிசாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொல்காவலை எம். பி. சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி, இ. போ. ச. பஸ்களில் கட்சி ஆதரவாளர்கள் ஏற்றிச் சென்ற இரத்தினபுரி எம். பி. ஜி. வி.புஞ்சிநிலமே, ஜனதிபதி தேர்தலின் பின்னர் ஊர்வலங்கள், கூட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தும், அதனையும் மீறி நடத்தப்பட்ட அரசியல் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றிய பியசேன எம். பி தர்மதாச பண்டா ஆகிய மூவருக்கும் எதிராகவே ஒழுங்கு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவுள்ளது. [வெ]

பாராளுமன்றம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டங்களில் 'தேர்தல் பரிசோதனை'நடத்தவும் அரசு விரும்புவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

பொதுத் தேர்தலை தாமதமின்றி நடத்துவதன் மூலம் அரசுக்கு சார்பான 'தீர்ப்பு' கிடைக்கலாம் என்று அரசு வட்டாரங்களில் பேசப்படுகின்றது. அதே நேரத்தில்; பொதுத் தேர்தலை விரைவாக நடத்தினால் அரசாங்கத்துக்கு கடுமையான சோதனையை ஏற்படுத்தலாம் என்று எதிர்க் கட்சிகள் கருதுகின்றன.

இந்த நிலையில்; ஜனதிபதி தேர்தலைப்போன்று பொதுத் தேர்தலையும் விரைவாக நடத்தி, தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க ஐக்கிய தேசிய கட்சி ஆலோசிப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது

நிலைமை எவ்வாறு இருந்தாலும், இவ்வருடத்துக்குள் பொதுத் தேர்தல் நடைபெறலாம் என்றே அரசியல் அவதானிகள் நம்பிக்கையாக அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

ஈரான் கைகொடுக்கிறது

வீயன்னா, அக். 24

வீயன்னாவிலுள்ள சர்வதேச அணுசக்தி நிலையத்திற்கு அமெரிக்கா அளித்துவந்த உதவியை நிறுத்தியதையடுத்து, அதனை வழங்குவதற்கு ஈரான் முன்வந்துள்ளது.

இந்நிலையத்திலிருந்து இஸ்ரேல் விலக்கப்பட்டதையடுத்து அதற்கு அளித்துவந்த 85 லட்சம் டாலர் உதவியை அமெரிக்கா நிறுத்தியிருந்தது தெரிந்ததே. (வெ)

பாதுகாப்பு...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் சார்பு குழுக்கள் மேற் கொள்ளும் அசம்பாவித சம்பவங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும்முழுப்பொறுப்பு, பாதுகாப்புப் படையினரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி அரசு உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63–ம் இலக்க அச்சகத்தில் 1982–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu – P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.